பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஹாஜா நிஜாமுத்தீன் அவ்லியா அவர்களின் ஜீவிய சரித்திரம்.

இஃது

அய்யம்பேட்டை

S. அப்துல் றஸாக் ஸாஹிபு

அவர்களால்

உர்துவிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

இதனை

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

முதல் பதிப்பு

1955

Registered Copy-Right.

இதன் விலை] [அணா 8

இந்த புஸ்தகம் எப்போதும் கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,

மதராஸ் 5.

# ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் காஜா நிஜாமுத்தீன் அவ்லியா

## ஹஸரீன் பக்ஷ் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹு) அவர்களின் ஜீவிய சரித்திரம்.

இப்னு காஜா அஹமத், பின் காஜா அலி புகாரி, பின் ஸையத் அப்துல்லா, பின் சையத் ஹுசேன், பின் சையத் அலி, பின் சையத் அஹமத், பின் சையத் அபி அப்துல்லா, பின் சையத் அலி அஸ்கர், பின் சையத் ஜாபர், பின் சையத் அலி ஹாதி, பின் இமாம் முஹம்மது ஜவாத், பின் இமாம் அலி ரஸா, பின் இமாம் மூஸா காஸிம், பின் இமாம் ஜாபர் ஸாதிக், பின் இமாம் முஹம்மது பாகர், பின் இமாம் ஜைனுலாபிதீன், பின் ஹஸ்ரத் அமீருல் முமினீன் இமாம் ஹுசைன் (ரலி).

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் தாயாரின் கோத்திர வழியும் சையத் ஹுசைனியைச் சார்ந்தது.

அதாவது தாயார் பெயர் சுலைகா பீபீ. இவர்கள், சையித் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் கலீபாவாக இருந்து வந்த சையத் முஹம்மத் அஸ்ஹர் அவர்களின் அருமை புதல்வியாவர். மேற்சொன்ன கலீபாவின் தந்தைப் பெயர் சையத் ஹுசைன்; இவர், மேலே வந்துள்ள வமிசப் பாரம்பரையின் பிரகாரம், சையத் அலி உடைய புதல்வர்.

இதை அனுசரித்து இங்கு கணவர் மனைவியார் இரு தரப்பில் உள்ள கோத்திர சம்பந்தமும் ஒன்றாக கூடி விட்டது. ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் தந்தை வழியைச் சேர்ந்த மூதாதைகள் மிக்க கல்வி யறிவும் உயரிய சாந்த குணமும் படைத்தவர்களென 'ஸிர் அத்துல் ஆஸ்ரார்' என்ற நூலில் வரையப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் அவர்களின் தாயாரது மூதாதையான காஜா அரப் என்பவர்களும் தந்தையாரது மூதாதையான காஜா அலி என்பவர்களும் முதன் முதல் இந்தியாவுக்கு வந்து லாகூரில் தங்கினார்கள். அதற்கப்பால் அவர்கள் 'பதாயூன்' நகரை யடைந்து அங்கேயே தங்கள் வாசத்தை ஏற்படுத்திக் கொண்டதற்குப் பின்னர், இருவருக்கிடை உறவு ஏற்படலாயிற்று. அதாவது காஜா அரப், என்பவர்கள் தம் புதல்வியாகிய பீபி ஜுலைகாவை காஜா அலியின் குமாரராகிய காஜா அஹமத் என்பவருக்கு நிக்காஹ் செய்து வைத்தார்.

காஜா அஹமத் அவர்கள் விசேஷ மதபக்தரும் முதிர்ந்த பேணுதலுடையவராயு மிருந்த படியால் அக்காலத்திய அதிபதி அவரை பதாயூன் நகருக்கு 'காஜி'யாக நியமனம் செய்தார் இவருடைய சமாதியும் பதாயூனிலேயே இருந்து வருகிறது.

இறை வல்ல நாயன் மேலே கூறப்பட்டுள்ள திருமணத் தம்பதிகளின் வயிற்றி லிருந்து மஃரிபத்திலும் கராமத்துகளி லும் (மெய் ஞானத்திலும் மகிமைகளிலும்) தலை சிறந்து விளங்கி வரும் குத்புல் அக்தாப் ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜா முத்தீன் ஔலியா அவர்களை, ஹிஜ்ரி 634-ல் ஸபர் மாதம் 27ம் தேதி கடைசி புதன் கிழமை சூரியன் உதயமான சமயத் தில், பதாயூனிலேயே அவர்களின் புனித தாயார் வயிற்றி லிருந்து ஈன்ற வைத்தான்.

ஹஸ்ரத் அவர்கள் கடைசி புதன் கிழமை தினம் ஜனித்தார்கள் என்பதை முன்னிட்டே பிரதி வருஷத்திலும் புதன் கிழமை யன்று அவர்கள் திரு சமாதியும் குசுல் செய்விக்கப் பட்டு வருகிறது. அவ்வாறு கழுவி விடப்பட்ட குசல் ஜலம் தபர்ருக் (பிரசாதம்) போல் வழங்கப்படுகிறது. ஹஜ்ரத் சல்தானுல் மஷாயக் அவர்கள் தம் ஜீவிய காலம் முழுவதிலும் வருஷந்தோறும் கடைசி புதன் கிழமை குசுல் செய்து வந்தார்களென்ற கொள்கை நாளது வரையிலும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஹஸ்ரத் அவர்கள் 5-வது பிராயத்திற்கு வந்ததும் தங்கள் தந்தையாகிய காஜா அஹமத் சாஹிபு அவர்களை இழந்து யதீம் (தந்தை யிழந்த பிள்ளை) ஆய் விட்டார்கள். ஆனால் பிராயத்திற்கு எய்தியதும் பரிபூரண பயபக்தியுடன் பகிரங்க கல்வியைக் கற்பதில் அமர்ந்து விட்டார்கள்.

அவர்களுடைய பிராயம் இருபத்தைந்துக்கு எட்டிய போது தம் தாயார் அவர்களை டில்லிக்கு அழைத்து வந்து அங்குள்ள புராணகில்லை (பழைய கோட்டை)க்குச் சமீபமாயுள்ள ஒருவரின் வீட்டுக்கு வெளியில் உள்ள தாவாரத்தில் தங்கியிருந்தார்கள்.

பிறகு இரண்டாவது தடவையாக மற்றொருவரின் கூரை தீபாட்ட மாடி வீட்டின் மீது வாசம் பண்ணினார்கள்.

அக்காலத்தில் மௌலானா "ஷம்ஸ்கார்ஷமி" என்னும் நாமமுள்ள பெரியார் ஒருவர் கல்வி யறிவில் அரும் பெரும் வித்வானாக விளங்கி வரலானார். அநேகர், அவரிடஞ் சென்று கல்வி பயின்று வந்தவர். ஹஸ்ரத் அவர்களும் அந்த அறிவாளரிடமே மதக்கல்வியை பயின்று அதை பூர்த்தி செய்தார்கள்.

ஹஸ்ரத் மௌலானா அவர்களுக்கு தம் மாணவராகிய நிஜாமுத்தீனிடத்தில் விசேஷ அன்பு ஏற்பட்டிருந்தது மட்டுமன்றி ஹஸ்ரத் மௌலானா அவரை மிக்க சங்கையோடுங்கூடி உபசரித்து வந்தார்கள்.

மௌலானா கமாலுத்தீன் பெயர் கொண்ட மற்றொரு உஸ்தாதிடத்தில் "மஷாரிகுல் அன்வார்" என்னும் சிறந்ததோர் கிரந்தத்தையும் ஓதி முடித்தார்கள். அதன் பேரில் மௌலானா தம் கைபடவே அவர்களுக்கு யோக்கியதாபத்திரம் எழுதிக் கொடுத்தார்கள். (ஸனது)

மௌலானா கமாலுத்தீன் உண்மையில் மிக்க தக்வா (பேணுதல்) உடையவர்கள் என்பதற்கு அத்தாட்சியாக இன்னு ஒரு விஷயம் குறிப்பிடத் தகுந்தது. அதாவது பல்பன் சுல்தாளுகிய கியாசுத்தீன் அவரது குணாதிசயங்களை கேள்வியுற்று அவரை தம் பேஷ்இமாமாக நியமிக்க முயற்சித்தபோது மௌலானா கமாலுத்தீன் அவர்கள் "என்னிடத்திலோ தொழுகை ஒன்றைத் தவிர வேறெவ்வித பொருளும் கிடையாதாகையால் பாத்ஷா விருப்பத்திற்காக நான் இவ்வரிய பொருளையும் எவ்வாறு விட்டுவிட முடியும்" என்று துண்டித்த பதிலளித்துள்ளார்கள். மௌலானா கமாலுத்தீன் டில்லியிலேயே அடக்கமாயிருக்கிறார்கள்.

இனி ஹஸ்ரத் நிஜாமுத்தீன் சுல்தானுல் மஷாயக் அவர்களின் ஜாகை ஷய்க் நஜீபுத்தின் முதவக்கல் என்பவரின் இருப்பிடத்திற்கருகில் ஏற்பட்டது. இந்த இரு பெரியார்களுக்கிடையே பூரண நட்பு இருந்து வந்த காலத்திலேயே ஹஸ்ரத் நிஜாமுத்தீன் தாயார் அவர்களும் காலமானார்கள்.

"அக்பாருல் அக்யாரின்" அதை இயற்றிய ஆசிரியர் பின்வருமாறு எழுதுகிறார்:—

ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஒளலியாவின் வயது 12 ஆக இருந்து வந்த சமயம் அவர் ஒரு நாள் ஓர் அகாராதி கிதாபை எடுத்து அதை கவனித்துக் கொண்டிருந்தார்.

அப்போது அபூபக்கர் பெயர் கொண்ட கவ்வால் (புலவர்) தங்கள் உஸ்தாத் சமூகத்திற்கு வந்து ஷய்க் பஹாவுத்தீன் அவர்களால் இயற்றிய சில கவிகளையும் கஸீதா என்னும் புகழ் பாடலையும் பாடிவிட்டு ஷய்க் அவர்களின் வேலைக்காரிகள் மாவு அறைக்கும் சமயத்திலும் ஜிக்ரு செய்து வருவார்களென்பதைக் குறித்து அவர்களை சிலாகித்துப் பேசினார். ஆயினும், அது சமயம் சுல்தானுல் மஷாயக் அவர்களுக்கு அதுபற்றி மனதில் எவ்வித உணர்ச்சியும் ஏற்படவில்லை.

பிறகு ஒரு சமயம், புலவர் அஜூதஹன் நகருக்கு வந்து ஷய்க் பரீதுத்தீன் என்னும் மஹானைக் கண்டு அவர்களின் உத்தம குணாதிசயங்களையும் அல்லா உடைய பாதையில் அவர்கள் அரும்பாடு பட்டு அடைந்துள்ள தக்வாவின் சிறப்பைப்பற்றியும் விவரித்த போது அதை செவியுற்ற சுல்தானுல் ஒளலியா அவர்கட்கு ஷய்க் சம்பந்தமான ஆவலும் பிரீதியும் மனதில் ஒருவாறு பொங்கலாயின.

எழுந்திருக்கும் போதும் உட்காரும் போதும், தூக்கத்திலும் விழிப்பிலும், உண்ணல், குடித்தல் ஆக எச்சமயத்திலும் ஷய்க் உடைய ஞாபகம் உள்ளத்தில் துடிக்கத் தொடங்கிற்று. அதற்கப்புறந்தான் பதாயூனை விட்டுப் புறப்பட்டு டில்லி நகரையடைந்து, மதக் கல்வியைக் கற்று, யோக்கியாம்சப் பத்திரத்தை அடைந்தார்கள்.

முரீது வாங்குவதற்காக சுல்தானுல் மஷாயக் அவர்கள் அஜூதஹனில் உள்ள ஷய்க் பரீதுத்தீன் அவர்கள் சந்நிதானத்தில் ஆஜராகி மரியாதை செய்து முரீது வாங்கிய பின்

ளார் தம் ஷய்க் இடத்தில் "இனி நான் கல்விப் பயிற்சியை இத்தோடு நிறுத்தி விட்டு நவாபில் சம்பந்தமான தொழுகை இபாதத்தில் ஈடுபட்டு விடலாமா?" என்று வினவியபோது ஷய்க் அவர்கள் "நான் ஒருவரையாவது கல்வி கற்க வேண்டா மென்று தடுக்க மாட்டேன், நீங்கள் இரண்டு துறைகளிலும் ஈடுபட்டு விடுங்கள். ஏனெனில் தர்வேஷ் (பகீர்) இல்மு (கல்வி) கற்க வேண்டியது அத்தியாவசியமாகும். இல்லையேல், அவன் ஷைத்தானுடைய மோசத்தனத்திற்கு ஆளாகி விடக்கூடும்" என்று விடை பகர்ந்தார்கள்.

முரீது கொடுத்த சிறிது காலத்திற்குப் பிறகு ஹிஜ்ரி 1672-ஹு ரபீயுலவ்வல் மாதம் 21ந் தேதி கடைசி புதன் கிழமை தினம் கிலாபத்கிற்கா (சட்டை)வும் அவர்களுக்கு அருளப்பட்டது. அதன் பின் அவர்கள் டில்லிக்குச் செல்ல அனுமதி யடைந்தார்கள்.

ஹஸ்ரத் சுல்தானுல் ஔலியா விவரிக்கிறார்கள்:—நான் அஜூத்ஹன் நகரில் என் ஷய்க் சமுகத்தில் தங்கியிருந்த காலம் வரையில், ஷய்க் அவர்கள் கொடிய செலவு கஷ்டத்திற்குட் பட்டிருந்தார்கள்.

அவர்களின் முரீதுகளுள் ஒருவர் வெளியிற் சென்று தண்ணீர் கொண்டு வருவார், ஒருவர் விறகு, ஒவர் காட்டி லிருந்து கிழங்கு கொண்டு வந்து சமர்ப்பிப்பார். நான் அக்கிழங்குகளை அவித்து ஷய்க் அவர்களுக்கெதிரில் கொண்டு போய் வைப்பேன்.

அவர்கள் அவைகளினின்றும் கொஞ்சம்போல் எடுத்துப் புசித்து நோன்பு திறப்பார்கள். மீதியான கிழங்குகள் தம்மைச் சேர்ந்தோருக்கிடையில் பகிர்ந்து விடுவார்கள்.

ஒரு நாள் சம்பவம் யாதெனில், நான் கொஞ்சம்போல் உப்பை கடன் வாங்கி, கிழங்குகளில் போட்டு அவித்தேன்.

அவித்த கிழங்குகளை ஒரு டம்ளரில் போட்டு ஷய்க் அவர்களுக்கு முன் வழக்கப்படி கொண்டுபோய் வைத்த உடனே ஷய்க் அவர்கள் "எனக்கு இதில் ஏதோ சந்தேகப்படுகிறபடியால் நான் இதை தின்ன முடியாது" என்று மொழிந்தார்கள்.

அவர்கள் அவ்வாறு மொழிந்ததைக் கேட்ட நான் "மௌலானா பத்ருத்தீன் இஸ்ஹாக் அவர்களும், ஷய்க் ஜமால் ஹான்ஸ்வி அவர்களும் தனித்தனியே கொண்டு வரும் ஒவ்வொரு பதார்த்தத்தையே நான் சமைக்கிறேன். தாங்கள் சந்தேகப்படும்படியான காரணம் எனக்கு விளங்கவில்லையே" என்று முறையிட்டேன்.

அதற்கு அவர்கள் என்ன சொல்லுகிறார்களெனில், "தர்வேஷ் (பகீர்) நப்ஸின் ருசி அல்லது இன்பத்திற்காக பிறரிடம் கடன் வாங்குவதைவிட உயிரை விட்டு விடுவதையே மேலெனக் கருதுவர். கிழக்கு மேற்கு இவ்விரு திசைகளுக்கிடை எவ்வளவு தொலை உண்டோ அவ்வளவே தவக்கல், கடன் என்பவைகளுக்கிடை அமைந்துள்ளது."

அப்பொழுது, நான் இனி ஒருவரிடத்திலும் கடன் வாங்க மாட்டேன் என்பதாக வாக்குறுதி செய்தேன். உடனடியாகவே ஷய்க் அவர்கள், தாம் வீற்றிருந்த கம்பளியை யெடுத்து என் கையில் கொடுத்து "இதோ வாங்கிக் கொள்ளும்; இனிமேல் பிறருடைய தயவை நீர் எதிர்பார்த்திருக்க மாட்டீர்" என்றார்கள்.

மேலும்; நான் டில்லிக்கு புறப்படும் சமயத்தில் ஷய்க் அவர்கள் என்னை நோக்கி "சத்துருக்களையும் சந்தோஷப்படுத்துவாய்; வாங்கின கடனை தீர்த்து விடுவாய்" என்று உபதேசித்தார்கள். நான் டில்லி வந்து சேர்ந்ததும் ஷய்க் நஜீபுத்தீன் என்பவரை முலாகாத்து செய்து என்னுடைய வரலாறுகளை யாவும் அவர்களுக்கு எடுத்துரைத்தேன். அவர்கள் அவைகளை

யெல்லாம் கேட்டு சந்தோஷப்பட்டு "மௌலானு! நாம் இருவரும் பீர்பாய்கள் (ஒரே குருவிடத்தில் உபதேசம் பெற்ற சகோதரர்கள்) ஆகிவிட்டோம்" என்றார்கள்

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்கள் விவரிக்கிறார்கள்:—

எனக்கு போதிய அளவிற்கு இபாதத் செய்வதற்காக, டில்லியில் வசதியான இடம் கிடைக்காமற் போனதால் நான் காட்டிற்கு போய்விடுவது வழக்கம். ஒரு நாள் காட்டில் உள்ள ஓர் குளக்கரையில் உட்கார்ந்து குர்ஆன் திலாவத் செய்து கொண்டிருந்தேன். அங்கு பகீர் ஒருவருக்கு பேரின்பக் காதலினால் ஆடல் அசைதலுக்குரிய நிலைமை ஏற்பட்டு விட்டது. சற்று நேரத்திற்குப் பின் நான் அவரிடம் "நீங்கள் நகரில் வசிக்கிறீர்களா?" என்று கேட்டபோது அவர் "நகரம் இபாதத்திற்கு தகுதியான இடமில்லை. வணக்கத்திற்குரிய உண்மையான இன்பத்தை யடைய காடே தகுந்தது" என்றார்.

அந்த தர்வேஷ் சம்பாஷணை முடிந்தவுடன் நான் ஓர் தோட்டத்திற்குள் போனேன். உளுச் செய்து, 2 ரக்அத் தொழுது கொண்டு பின் வருமாறு துவா கேட்டேன்: இறைவனே! எனக்கு எந்த விடம் தகுதியாகும் என்று நீ நினைக்கிறாயோ அதை எனக்கு அறிவிப்பாய். நான் அங்கேயே போய் நிலைபட்டு விடுகிறேன்" அதற்கான தெய்வீக உத்திரவு எனக்கு கிடைத்தது. விடை யாதெனில் "உனக்குரிய இடம் கியாஸ்பூர் என்பது. அங்கு போய் குடியேறு". அவ்வாறே நான் கியாஸ்பூர் ஸ்தலத்தை யடைந்து பொது மக்களுக்கு நல்லுபதேசங்களை புகட்டி வரலானேன்.

நான் போன தினத்தி லிருந்தே ஆயிரக் கணக்காக முரீதுகளும் விசுவாசிகளும் என்னிடம் வரப்போகத் தொடங்கின மாசுத்தீன் கேகபாத் பாதுஷாவும் அதே ஸ்தலத்தில் புதி

பட்டணமொன்றை ஸ்தாபித்தார். அதன் பொருட்டு மந்திரிகளும், சிமான்களும், கூட்டங் கூட்டமாக அங்கு திரண்டு வரலாயினர். ஜனத்தொகையை அதிகரிக்கக் கண்ட நான், இனி அங்கு வசிப்பது சரியல்ல வென்று எண்ணினேன். இப்படியாக எண்ணி வரும் சமயத்தில் என்ன நடந்ததென்றால், அஸ்ரு தொழுகை சமயத்தில், அழகிய மேனியும் மெலிந்த சரீரமும் வாய்ந்த வாலிபரொருவன் என்னிடத்திற்கு வந்து சொல்லுகிறார்:—

“நீங்கள் ஆரம்பத்திலேயே தம்மைப் பற்றி பிரஸ்தாபித்திருக்கக் கூடாது. எப்பொழுது பிரஸ்தாபம் ஏற்பட்டு விட்டதோ கியாமத் நாளில் ரஸுலுல்லா (ஸல்) அவர்களுக்கு முன் வெட்கமடையாதிருக்கக் கூடிய முறையில் நடந்து கொள்ள வேண்டும்.” அவர் மேலும் “ஜனங்களினின்றும் விலகி அல்லா உடைய இபாதத்தில் ஈடுபட்டிருத்தல் அவ்வளவ திறமையான காரியமல்ல. ஜனங்களுக்கிடையிருந்து கொண்டு தான் இபாதத் செய்வது சிறந்த காரியம்” என்று கூறினார்.

அப்பால், நான், சிறிதளவிற்கு சாப்பாடு கொண்டு வந்து அவருக்கு முன் வைத்தேன். அவரோ, அதை சாப்பிடவில்லை.

வாலியர், வாயலாய் மேற் கூறப்பட்ட மொழிகளை கேட்டதற்குப் பிறகு நான் அந்த ஸ்தலத்திலேயே வசிக்க வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டேன். என்னிடம் வந்த அவ் வாலிபர் கொஞ்சம் ஜலத்தை மாத்திரம் பருகி விட்டு மறைந்தார்.

ஷய்க் அப்துல்ஹக் முஹத்திஸ் தெஹலவி எழுதுகிறார்கள்:—

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள், பின்னர் அதே இடத்திலேயே வாசம் ஏற்படுத்திக் கொண்டார்கள். பிரமுகர், பாமரர் எல்லோருமே திரள் திரளாக வந்து அவரது

அனுக்கிரகத்தை பெறலாயினர். ஹஸ்ரத் ஔலியா அவர்கள் எப்போதுமே நோன்பு நோற்பது வழக்கம். சாயங்காலம் நோன்பு திறக்கும்போது பழைய ரொட்டித் துண்டே அவர்களுக்கு போதுமானதாக இருந்து வந்தது. ரொட்டியும் கிடைக்காமற் போனல் சும்மா இருந்து விடுவார்கள்.

சிற்சில வேளைகளில் அவர்களின் வேலைக்காரர் அவர்கள் சமுகத்தில் " ஹஸ்ரத்! தாங்கள் இப்தார் நேரத்திலும் மிக்க குறைவாக புசிக்கிறீர்கள். இப்போதும் நான் கொண்டுவந்திருக்கும் ஆகாரத்தை வேண்டாம் என்கிறீர்களே, இதனல் தங்கள் பலஹீனம் அதிகரித்து விடாதா?" என்று முறையிடுவார்.

அப்போது ஹஸ்ரத் நிஜாமுத்தீன் அவர்கள், "ஆ! எத்தனையோ மிஸ்கீன் பகீர்கள் இச்சமயமும் பள்ளிவாசல், சத்திரம் முதலிய விடங்களில் பசியால் வாடிவதங்குகிருர்களே அவர்களை நினைக்கும்போது இந்த ஆகாரம் என் தொண்டையில் எவ்வாறு இறங்கும்? போதும் எடுத்துச் செல்" என்று அமுத வண்ணமாக பதிலளிப்பார்கள்.

ஹஸ்ரத் அவர்களின் கீர்த்தி நாளடைவில் அதிகரித்த போது, அமீர்சைபுத்தீன் ஹஸிமுத்தீன் அஹமத், காஜா குஸ்ரு ஆகியவர்களும் ஆஜராகி அவர்களிடம் முரீது வாங்கினூர்கள். இச்சமயம் காஜா அமீர்குஸ்ருவின் வயது 20.

நிற்க, ஹஸ்ரத் அவர்களிடம் 'ஸமா' என்னும் புகழ் பாடக் கச்சேரி நடப்பதுண்டு. அதுபற்றிய தகவல் பாதுஷா கியாஸுத்தீன் தக்லக் என்பவருக்கு எட்டியபோது அவர் உள்ளத்தில் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியாவைக் குறித்து ஒரு வித அருவெறுப்பு ஏற்படலாயிற்று. அதன் பேரில் பாதுஷா அனவர், ஹஸ்ரத் அவர்களுடைய வேலைக்காரர்களுக்கு பல் வேறு கஷ்ட சங்கடங்களை விளைவிக்கவும் எண்ணினூர்.

ஆண்டவன் செயல்! இத்தகவல் சுற்றுப் பிரயாணி யொருவர் வாயலாய் முல்தானில் உள்ள ஷய்க் ருக்னுத்தீன் அவர்களுக்கு எட்டியது. ஷய்க் ருக்னுத்தீன் அவர்களுக்கு ஹஸ்ரத நிஜாமுத்தீன் அவர்கள் பால் விசேஷ அன்பும் நேசமும் இருந்து வந்தபடியால் அவர்கள் இந்த தகவலைக் கேட்டதும் உடனே டில்லிக்கு புறப்பட்டு ஹஸ்ரத் ஜாகையில் தங்கினார்கள்.

அடுத்த நாள் 'ஸமா' மஜ்லிஸ் நடைபெற்றது. ஹஸ்ரத் சுலதானுல் மஷாயக் அவர்களுக்கு ஸமாவின் உணர்ச்சி நிலைமை ஏற்பட்டதும், ஷய்க் ருக்னுத்தீன் அவர்கள் எழுந்து நின்று அவர்கள் கைச் சட்டையை பிடித்திழுத்து உட்காரவைத்தார்கள்.

மீண்டும் சிறிது நேரத்திற்குள் ஹஸ்ரத் எழுந்திருக்கவே அவர்கள் சட்டையின் கீழ் ஓரத்தைப்பற்றி இழுத்து அவர்களை வீற்றிருக்கச் செய்தார்கள்.

கொஞ்ச நேரத்திற்குப்பின் ஹஸ்ரத் அவர்களுக்கு மீண்டும் 'வஜத்' என்னும் பேரின்பக்கொதிப்பு ஏற்பட்டு அவர்கள் எழுந்து அசையத் தொடங்கினதும் ஷய்க் ருக்னுத்தீன் கபில் தொழுகையில் அமர்ந்து விட்டார்கள். அதற்குப் பின் ஸமா மஜ்லிசும் முடிவுற்றது.

மஜ்லிஸ் முடிவடைந்ததும் மௌலானா முஹம்மத்ஷா இமாம் என்பவர், ஷய்க் ருக்னுத்தீனிடஞ் சென்று, "மௌலானா அவர்களே! ஸமா மஜ்லிஸ் நடந்து கொண்டிருந்த சமயம் தாங்கள் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியாவின் கைச்சட்டையை முதல் தடவையாகவும், அவர்கள் சட்டையின் கீழ் ஓரத்தை இரண்டாவது தடவையாகவும் இழுத்து உட்காரவைத்ததற்குப் பின், மூன்றாவது தடவையாக, தொழுகையில் அமர்ந்து விட்டீர்களே, அதன் ரகசியத்தை தயை கூர்ந்து எனக்கு

சொல்வீர்களாக" என்று மரியாதையுடன் கேட்டுக் கொண் டார்கள்.

அதற்கு ஷய்க் ருக்னுத்தீன் எத்தகைய பதிலளிக் கிறார்கள் என்றால் :—"மௌலானாவே! என் சகோதரரான நிஜாமுத்தீனுக்கு வஜத் ஏற்பட்டு அவர் எழுந்திருந்ததும் ஏழாவது வானத்தில் அடி வைத்தார். நான் முதல் தடவை யில் பெருங்கஷ்டத்துடன் அவர் கைச்சட்டையை இழுத்து அவரை உட்கார வைத்தேன்.

இரண்டாவது தடவை அவர் எழுந்திருந்த போது எனக்கு அவர் கைச்சட்டையும் எட்டாமற் போகவே அவர் சட்டையின் கீழ் ஓரங்களை இழுக்க நேர்ந்தது.

மூன்றாவது தடவை அவர் எழுந்திருந்தாராயினும் அப் போது அவர் எனக்குத் தென்படாததால் எங்கே போனார் என்பது தெரியவில்லை. ஆனதுபற்றி நான் நபில் தொழுகை யில் ஈடுபட்டு விட்டேன்" என்றாரே.

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியாவைப்பற்றி "ஸைருன் ஔலியா" என்ற கிதாபில் வரையப் பட்டிருப்பதாவது :—

ஒரு தடவை டில்லி நகரின் கொத்வாலாகிய மௌலானா ஸஹீருத்தீன் என்பவர் சுல்தானுல் மஷாயக் ஹஸ்ரத் நிஜா முத்தீன் ஔலியா அவர்கள் சமூகத்தில் அவர்களைக் கண்டு கொள்ள வந்தார். அப்போது கொத்வால் அவர்களுக்கு சற்று தூரத்திலிருந்தே சாம்பிராணி எரியும் வாசனை அவர்களின் நாசிக்கு எட்டியது. ஹஸ்ரத் ஔலியா அவர்கள் வசிக்கும் அறையில் சாம்பிராணி புகை போட்டிருப்பதாக அவர் கருத லானார். கிட்டத்தில் வந்தவுடன் வேலைக்காரர் ஹஸ்ரத் ஔலியா அவர்களின் அறைக் கதவுகளை திறந்தார். ஆனால் அச்சமயம் அறைக்குள் சாம்பிராணி புகையோ அல்லது வாச

லேயோ இருக்கக் காணேம். அதனல் அவருக்கு பெரும் ஆச்சரியம் ஏற்பட்டது.

சுல்தானுல் மஷாயக் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்கள் தம் ரகசிய ஒளியைக்கொண்டு மௌலானவின் மனேபாவத்தை கண்டறிந்து "மௌலான! தாங்கள் முகர்ந்தது சாம்பிராணி வாசனை யல்ல; அவ்வாசனை வேருெரு வஸ்துவின் வாசனையாகும்" என்று கூறினர்கள்.

சுப்ஹானல்லா! எந்தவோர் பரிபூரண ஒளலியாக்கள் தங்கள் விலாயத்தில் உள்ள 'குத்பியத்' என்னும் பதவியைக் கடந்து மஹபூபி, மாஷூகி என வழங்கப்படும் தர்ஜாக்களை (பதவிகளை) அடைந்து விடுகிருர்களோ அவர்கள் உள்ளமையானது அல்லா உடைய அருளைக் கொண்டு பிறர் உள்ளத்தின் ரகசியத்தையும் வெளிப்படுத்தக் கூடியதாய் விடுகிறது. அவர்கள் நாட்டத்தில் அல்லா உடைய நாட்டமும் பக்க பலமாய் விடுகிறது. புனித பேரின்பக் காதலின் பொருட்டு காதலர் சரீரங்களே மறைவான பரிமளத்தைக் கொண்டு மணந்து போகின்றன. எந்த பரிசுத்தவான்கள் அவர்களிடத்திற்குச் செல்லுகிருர்களோ, அந்த காதாக்களின் பரிசுத்த மணத்தின் உணர்ச்சியை அடைந்து விடுகிருர்கள்.

எனவே, ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஒளலியா மஹபூபே இலாஹி (அல்லாவுக்கு பிரியமுள்ளவர்கள்) அவர்களின் நற்கீர்த்தியானது சூரிய ஒளிவுக்கொப்பாக தலை சிறந்து விளங்கி வருவதிலிருந்தே ஒளலியாக்களுக்கிடை அவர்களும் மிக்க உயரிய பதவி யடைந்தவர்கள் என்ற உண்மை சொல்லாமலே விளங்கும்.

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியாவின் முர்ஷிதாகிய ஹஸ்ரத் ஷய்க் பரீதுத்தீன் அவர்களால் அருளப்பட்டிருந்த

புனித வஸ்திரத்தை இப்போது ஹஸ்ரத் ஔலியாவே தம் கைப்பட காஜி முஹையத்தீன் என்பவருக்கு கொடுத்து விட்டார்கள்.

அந்த வஸ்திரத்தில் இன்பகரமானதோர் வாசனை வெளியாய்க் கொண்டிருந்தது. காஜி அவர்கள், அதை வாங்கின வுடன் தன் தலைமேல் வைத்தெடுத்து நேரே வீட்டிற்கு கொண்டு வந்து மிக்க ஜாக்கிரதையாக அவ்வரிய ஞாபகச் சின்னத்தைப் பாதுகாத்து வந்தார்.

வஸ்திரத்தின் வாசனை தற்காலிகமானது என்றே அவர் எண்ணியிருந்தார். ஆனால், எத்தனையோ நாட்கள் கழிந்த பின்னரும் அவர் அதை யெடுத்து முகர்ந்த போது முன்னவே யுள்ள வாசனையைக் காட்டிலும் அதிக வாசனையே இருக்கக் கண்டு பிரமித்து விட்டார்.

வஸ்திரத்தை நன்றாய்த் துவைத்தும் கழுவியும் அதனை காற்று வெயிலில் உலர்த்தியும் சோதித்தபோது அவ்வளவுக் கவ்வளவு அதன் வாசனை அதிகரித்துக் கொண்டே இருந்தது. அதன் பேரில், அவர் தம் வியப்பை சகிக்க முடியாமல் நேரே ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா விடத்திற்குச் சென்று அதைப் பற்றிச் சொன்னார்.

“ சகோதரரே ! அந்த வாசனை உள்ளன்பிற்குரிய வாசனையாகும். அல்லாஹு தஆலா அதைத் தன் அன்பர்களுக்கு தந்தருள்கிறான் ” என்று சொன்னார்கள்.

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களுக்கு முதன் முதல் டில்லியில் மிக்க செலவு கஷ்டம் ஏற்பட்டிருந்தது. அவர்கள் தம் சிஷ்யர்களுடன் பெரும்பாலும் பசி பட்டினியாகவே காலங்கழித்து வந்தார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியாக இருந்து வரும் காலத்தில் ஹஸ்ரத்

அவர்கள் வசித்து வந்த ஜாகைக்கருகில் ஓர் கிழவியும் வசித்து வந்தார். அவள் பருத்தி நூல் இழைத்து அன்றாடம் கிடைக்கும் கூலியைக் கொண்டு கஞ்சி காய்ச்சி அதனல் நோன்பு திறப்பது வழக்கம்.

ஒரு நாள் அக்கிழவியாருக்கு அயல் வீட்டு பகீர்கள் யாவரும் பட்டினியாகக் கிடக்கும் தகவல் கிடைத்தது.

உடனே அவர் அச்சமயம் தம் கைவசமிருந்து வந்த அரைச் சேர் கோதுமை மாவு ஹஸ்ரத் ஔலியா அவர்கள் சமுகத்தில் கொண்டு வந்து சமர்ப்பித்தார். ஹஸ்ரத் அதைப் பெற்று, ஷய்க் கமாலுத்தீன் யாகூப் அவர்களுக்கு அந்த மாவைக் கொண்டு போய் ஒரு பானையில் போட்டு, அதில் தண்ணீர் விட்டு கஞ்சிகாய்ச்சும்படி ஆக்ஞாபித்தார்கள்.

மாவு காய்ச்சியான பின் அதை ஏழை முஸாபிர்களுக்கு கொடுத்து விடலாம் என்பது அவர்கள் நோக்கம்.

ஷய்க் கமாலுத்தீன் என்பவர், உத்திரவிற்கிணங்க அந்த மாவை எடுத்துச் சென்று, பானையில் அதை ஜலத்துடன் கலந்து உலையில் வைத்தார்கள்.

இரண்டொரு கொதிப்புகள் வருவதற்கிடையே பக்கீரி யொருவர் அலங்கோலமாக ஓடி வந்து ஔலியா அவர்கள் முன்னிலையில் " நிஜாமுத்தீனே! சாப்பாடு ஏதேனும் இருந் தால் கொண்டு வந்து கொடு " என்று உரத்த சப்த மிட்டார்.

" சற்று பொறும், சமையல் ஆய்க்கொண்டிருக்கிறது " என்ற பதில் கூறப்பட்டது.

மீண்டும் பகீர், " நீயே எழுந்திருந்துபோய் அந்த பானையை அப்படியே எடுத்து வந்து என் எதிரில் வை " என்று ஹஸ்ரத் ஔலியாவுக்கு சொன்னர்.

அதைக் கேட்ட ஹஸ்ரத் ஔலியா எழுந்துபோய் அடுப்பின் மீதுள்ள சூடான சட்டியை தம் வஸ்திரத்தின் ஆதரவால் பற்றிக்கொண்டு வந்து அந்த பகீருக்கு முன் வைத்ததும், பகீர் தம் வலது கையை முழங்கை வரையில், பானைக்குள் நுழைத்து, சுடசுட கொதிக்கும் கஞ்சியையே யெடுத்து குடிப்பத் தொடங்கினர். சூட்டின் உணர்ச்சி அவருக்கு ஏற்படாத விதத்திலேயே அதிலுள்ள கஞ்சியை யாவும் அவர் பருகி விட்டதுமன்றி கடைசியாக அந்த பானையையும் அவர் 'டொப்' என தரையின் மேலிட்டு உடைத்து விட்டார்.

பானை உடைந்ததும் பகீர் நிஜாமுத்தீன் ஔலியாவை நோக்கி, "உனக்கு அந்தரங்க பாக்கியமோ 'பரீத்' (ஔலியாவின் முர்ஷித் ஷய்க் பரீதுத்தீன்) கொடுத்து விட்டார். உன் பகிரங்க வறுமையை யாம் இதன் மூலம் உடைத்து விட்டோம் (போக்கி விட்டோம்)" என்று சொல்லியதும் அதே சமயம் மாயமாய் மறைந்து விட்டார். பகீர் வாக்கிற்கேற்பவே அந்த நாள் முதற்கொண்டு வறுமையின் கொடுமை குறைய ஆரம்பித்தது.

ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் தொழுகைக்காக வெள்ளிக்கிழமை தோறும் தம் இருப்பிடமாகிய கியாஸ்பூரை விட்டும் "கேலுகடி" என்ற நகருக்கு கால்நடையாக நடந்து போவார்கள்.

அவ்வாறு நடந்து போய் வந்த சமயத்தில் ஒரு நாள் அவர்கள் மனதில் 'என்னிடம் குதிரை யிருந்திருந்தால் நான் அதன் மேலேறி போய்வர எவ்வளவு சௌகரியமாக இருந்திருக்குமே' என்ற விருப்பம் ஏற்பட்டது.

ஔலியா அவர்களுக்கு அவ்வித விருப்பம் ஏற்பட்ட மறுதினமே ஷய்க் நூருத்தீன் மலிக் என்ற பெரியார் குதிரை மேலேறி வந்தார். அவர் வந்ததும் ஹஸ்ரத் ஔலியா விடத்

தில் "நேற்று இரவு என் பீர் (குரு) ஆகப்பட்டவர்கள், உன்னிடத்தில் உள்ள கோடியான் (பெட்டைக் குதிரைகள்) யாவும் நிஜாமுத்தீனுக்குக் காணிக்கையில் கொடுத்து விடு, ஏனெனில் ஜும்மா தொழுகைக்காக 'கேலுகடி' என்ற ஸ்தலத்திற்கு அவர் நடந்து போக வேண்டியிருக்கிறது' என்று கட்டளையிட்டிருப்பதால், தாங்கள் நான் கொண்டு வந்திருக்கும் குதிரைகளை யாவும் ஒப்புக் கொள்ளுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

ஷய்க் நூருத்தீன் அவர்கள் வேண்டுகோளை செவியுற்ற ஹஸ்ரத் நிஸாமுத்தீன் ஒளலியா அவர்கள் "சரிதான். நீங்கள் உங்கள் குரு அவர்களின் உத்திரவின்படி குதிரைகளை எனக்கு கொடுக்க வந்திருக்கிறீர்கள். அவைகளை நான் ஒப்புக் கொள்ளலாமா என்பது பற்றி நானும் என் குருவின் உத்திரவை பெற வேண்டாமா?" என்று கூறி சற்று காலதாமதம் செய்யுமாறு கோரினார்கள்.

அதே நாள் இரவு ஹஸ்ரத் ஒளலியா அவர்களுக்கு அவர்கள் பீர் ஷய்க் பரீதுத்தீன் சொப்பனத்தில் தரிசனமளித்து "ஷய்க் நூருத்தீன் என்னுடைய முரீது. நான் தான் அவருக்கு குதிரைகளை உமக்கு கொடுத்து வருமாறு ஆக்ஞாபித்தேன்" என அறிவித்ததின் பேரில் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்கள் குதிரைகளை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார்கள்.

'அக்பாரே ஒளலியா' என்ற கிதாபில் வரையப் பட்டிருக்கிறது:—சுல்தான் அலாவுத்தீன் கில்ஜி காலமானதற்குப் பின், சுல்தான் குத்புத்தீன் முப்பாரக்ஷா டில்லி சிம்மாசனத்தில் அமர்த்தப் பட்டார். 1316-வது ஆண்டில் அவர் சிம்மாசனத்தை யடைந்தவுடன், அலாவுத்தீன் குமாரராகிய கிஸர்கானை படுகொலைக் குள்ளாக்கினார். கிஸர்கான் ஹஸ்ரத் நிஜா

முத்தீன் ஒளலியா விடத்தில் முரீது பெற்றிருந்தவர். ஹஸ்ரத் ஒளலியாவுக்கு பல்வேறு கஷ்டங்களை விளைவிக்க வேண்டு மென்பதே குத்புத்தீன் முபாரக்ஷாவின் நோக்கம்.

ஆனாலோ அவரது மந்திரி மார்களும், படையினர்களும் பெரும்பாலும் ஒளலியா அவர்களின் முரீதுகளாகவும் அவர்களது உண்மை விசுவாசிகளாயும் இருந்து வந்த படியால் பாதுஷாவின் கெட்ட எண்ணம் நிறைவேறவில்லை.

நிற்க, காஜீ முஹம்மத் கஸ்னவி என்பவர், பாதுஷாவுக்கு பிரத்யேக ஆலோசகராக இருந்து வந்தவர். அவரிடத்தில் ஒரு நாள் பாதுஷா, "ஷய்க் நிஜாமுத்தீன், ஏராளமாய் செலவு செய்கிறாரே அவர் செலவுக்காக பணம் எங்கிருந்து கிடைக்கிறது?" என்று விசாரித்தார்.

காஜிக்கு அந்தரங்கத்தில் ஒளலியா பால் அசந்தோஷ மேற்பட்டிருந்ததால் "நிஜாமுத்தீனுக்கு நம் பிரமுகர்களும் சிப்பாய்களுமே பண உதவி செய்து வருகிறார்கள். அதிலிருந்து அவர் தாராளமாய் செலவு செய்து வருகிறார், அவர் சமையல் செலவிலேயே தினசரி நூற்றுக் கணக்கில் ரூபாய் செலவாகிறது" என்று திரித்துக் கூறினார்.

பாதுஷாவுக்கு தம் ஆலோசகரின் பதிலைக் கேட்டு பொறாமை அதிகரித்தது. அதையடுத்து அவர் "இனி ஷய்க் நிஜாமுத்தீன் என்பவருக்கு நம் தர்பாரைச் சேர்ந்த யாராவது ஏதேனும் பொருளுதவி செய்வதாகத் தெரிந்தால், யாம் அவர்களின் உபகாரச் சம்பளத்தை நிறுத்தி விடுவோம். இன்னும், அவர் ஜாகைக்கு ஒருவரும் செல்லக் கூடாது. நம் கட்டளையை மீறிச் செல்பவர்கள் தங்கள் ஜாகையை வேறெங்கேனும் தேடிக் கொள்ள வேண்டும்" எனக் கட்டளை பிறப்பித்தார்.

பாதுஷா, பிறப்பித்துள்ள தடை உத்தரவின் செய்தி ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்களின் செவிகளுக்கு

எட்டியது. அதே சமயம் அவர்கள் தம் ஊழியரான காஜா இக்பால் என்பவரை கூப்பிட்டு "நீர் இன்று முதல் எல்லாவித செலவுகளையும் இரு மடங்காக அதிகப்படுத்திக் கொள்ளும். பணம் வேண்டிய போதெல்லாம் இன்ன மாடத்தில் "பிஸ்மில்லா" வை ஓதி விட்டு கை போட்டு எடும்; உமக்கு எவ்வளவு பணம் தேவைப்படுமோ அவ்வளவும் கிடைத்து விடும்" என்று உத்தர விட்டார்கள்.

காஜா இக்பால் என்பவர் ஹஸ்ரத் ஒளலியா அவர்களின் முரீது, கலீபா, தோழர், சமையல் வேலைக்காரர், விலைக்கு வாங்கப்பட்ட அடியார் ஆக இத்தனை அம்சங்களையும் ஒருங்கே வாயப்பெற்றிருந்தார். அந்த உத்திரவிற் கேற்ப, காஜா இக்பால், அன்று முதல், செலவுகளை யாவும் இரட்டிப்பாக அதிகரித்து நடத்தினார்.

பாதுஷா உடைய தடை உத்தரவுக்குப் பின், தர்பாரைச் சேர்ந்த ஒருவராவது ஒளலியா அவர்களின் ஆச்சிரமத்திற்கு போக்காம் விருந்து வருகையிலும் அங்குள்ள செலவுகள் யாவும் முன்னை விட இரட்டிப்பாகி விட்டன என்பதை கேள்வியுற்ற பாதுஷாவுக்கு பெரும் ஆச்சரிய முண்டாயிற்று. அப்போது அவர் அதற்கான வருமான ரகசியத்தை விசாரிக்க முயன்றார்.

ஹஸ்ரத் ஒளலியா அவர்களின் உத்தரவின் பலனுக பணம் ஏதோ மாயமான விதத்தில் மாடத்திற்குள்ளிருந்து கிடைப்பதாகத் தெரியவே பாதுஷாவுக்கு வெட்கத்தால் தலை குனிய நேர்ந்தது. ஆனுல், அவ்வாறு வெட்க மடைந்த பின்னரும், அவர் சும்மாயிருந்து விடவில்லை. உடனே மந்திரி யொருவரை தேர்ந்தெடுத்து "ஷய்க் ருக்னுத்தீன் என்ற மஹான் என்னை கண்டு கொள்ள வருஷத்திற்கொரு முறை 'முல்தான்' என்னும் ஊரிலிருந்து என்னிடம் வந்து போகிறார். நீரோ

வெனில், டில்லியில் வசித்துக் கொண்டிருக்கையிலும் என்னை எட்டிப் பார்க்காம லிருக்கிறீர், இது நினைக்கும்போதெல்லாம் எனக்கு பெரிய அவமானத்தை தரத்தக்க சங்கதி யல்லவோ?" என்று அவர் வாயலாக செய்தி அனுப்பி வைத்தார்.

ஹஸ்ரத் ஒளலியா அதைக் கேட்டதும் அதே தூதர் வாயலாக "பீர்மார்கள் (குருக்கள்) பிரமுகர்களின் இருப்பிடத்திற்கு போதல் வழக்கமில்லை. மன்னிக்க வேண்டும்" என்ற பதிலை சொல்லி யனுப்பி வைத்தார்கள்.

தூதர் மூலம் அவ்வித துண்டித்த பதிலை கேட்ட பாதுஷா விசேஷ ஆத்திர மடைந்தார். அதன் பின், இரண்டாவது தடவையாக "என் கட்டளைக்கு கீழ்படிந்தே தீர வேண்டும்" என்று பாதுஷா சொல்லி யனுப்பினார்.

அதன் மேல், ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்கள், ஷய்க் அலி சஞ்சரி அவர்களை ஷய்க் ஜியாவுத்தீன் ரூமி அவர்களிடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். (ஜியாவுத்தீன் ரூமி என்பவர் பாதுஷாவின் முர்ஷிதும், ஷய்க் ஷஹாபுத்தீன் சுஹர்வர்தியின் கலீபாவும் ஆவர்.)

"பாதுஷா பகீர்களை இம்சித்து வருவதனால் அவருக்கு யாதொரு பலனும் கிடைக்காது. அவரை அவ்வண்ணம் செய்யாமலிருக்குமாறு தடுத்து விடுங்கள்" என்ற செய்தியே ஒளலியா சொல்லி யனுப்பினார்கள். ஆனால் மேற் சொன்ன தூதர் ஷய்க் அலி சஞ்சரி "சஞ்சர்" ஸ்தலத்தை யடைந்த போது, ஷய்க் ஜியாவுத்தீன் ரூமி கவலைக்கிடமான நிலைமையில் நோவுற்றிருந்தமையால் போனவர் திரும்பி வந்து ஹஸ்ரத் ஒளலியாவுக்கு தகவல் கொடுத்தார்கள்.

அடுத்த மூன்றாவது தினமே ஷய்க் ஜியாவுத்தீன் காலமானார். அவரை டில்லியிலேயே கல்லடக்கம் செய்யப்பட்டது.

காலமானவரின் பாத்திஹா வைபவத்தில், சகல பிரமுகர்களும் மஷாயக்மார்களும் சுல்தான்களும் ஒன்று கூடியிருந்தார்கள்.

அச்சமயம் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா மஹபூபே இலாஹி அவர்களும் புறப்பட்டுப் போனபோது சபையோர் அனைவரும் மரியாதைக்காக எழுந்து நின்று சலாம் செய்து வரவேற்றார்கள். ஆனால் அச்சபையில் பாதுஷாவும் வந்திருந்தாராயினும் ஔலியாவை பார்க்காததுபோல் அங்கே நடந்த காரியங்களை யெல்லாம் கவனித்துக் கொண்டு ஏதோ தாம் குர்ஆன் திலாவத்தில் ஈடுப்பட்டிருப்பவரைப்போல் திருக்குர்ஆனை திறந்து வைத்து அதை உற்றுநோக்கிக் கொண்டிருந்தார்.

சபையோர் யாவரும் எழுந்திருந்து ஹஸ்ரத் ஔலியா அவர்களுக்கு மரியாதை செய்த முறையும் அவர்களை வரவேற்றின விதமும் பாதுஷாவின் பொறுமையையும் ஆத்திரத்தையும் மென்மேலும் அதிகரிக்கச் செய்தன.

இது நிற்க, அச்சமயம் சபையினர்களுள் சிலர் ஹஸ்ரத் ஔலியா விடத்தில் " அதோ பாருங்கள் பாதுஷாவும் வந்திருக்கிறார். தாங்கள் போய் அவருக்கு சலாம் செய்து வாருங்கள்" என்று அறிவித்தனர்.

அதற்கு ஹஸ்ரத் ஔலியா அவர்கள் "பாதுஷாவானவர், குர்ஆன் திலாவத்தில் ஈடுப்பட்டிருக்கிறார். இச்சமயத்தில் அவருக்கு இடைஞ்சல் செய்வது சரியல்ல; இவ்வேளை சலாம் சொல்லாமற்போனால் பாதகமில்லை" என்று விடை பகர்ந்தார்கள். பாத்திஹா வைபவ சபையின் அலுவல்கள் யாவும் முடிவுற்று அவரவர்கள் தத்தம் வீடுகளுக்கு திரும்பிப் போனபின்னர், பாதுஷா, சகல உலமாக்களையும் மஷாயக்மார்களையும் அழைப்பித்து ஓர் ஆலோசனை சபை நடத்தினார்.

அச்சபையில் முற்றிலும் நிஜாமுத்தீன் போக்கைப்பற்றியே பாதுஷா கண்டித்துப் பேசினார்.

இறுதியாக, பாதுஷா நிறைவேற்றிய தீர்மானம் என்ன வெனில்:—

"பெரியார்களே! நிஜாமுத்தீன் என்னைப் பார்க்க அனுதினமும் என்னிடம் வரவேண்டும், அனுதினம் வரமுடியாவிட்டால் வாரத்திற் கொருமுறை வரட்டும்; அப்படியும் முடியவில்லை யாகில் ஒவ்வொரு மாதத்தின் புதிய பிறையன்று என்னிடம் வந்து எனக்கு ஆசி கூறிவிட்டுப் போக வேண்டும். இவ்வாறான என் உத்தரவை நீங்கள் அவர்களுக்கு மனதில் படும்படியாக எடுத்துக் கூறி சமாதானப் படுத்துங்கள்."

நீங்கள் என் உத்தரவைப்பற்றி அவருக்கு விளக்கமாய் அறிவித்த பின்னரும் அவர் மேற்பட்டு ஏதேனும் சொல்லுவாராகில் அவர் சொல்லப்போவதை எனக்கு உள்ளவாறே கூறுங்கள். மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்பதைக் குறித்து நான் ஏற்பாடு செய்து கொள்ளுகிறேன்"

பாதுஷா மேற்கூறிய விஷயத்தை சபையோருக் கெதிரில் பொதுவாக சொல்லி விட்டதற்குப் பிறகு ஷைய்க் குத்புத்தீன் கஸ்னவி, ஷய்க் இமாமுத்தீன் துாஸி, ஷய்க் வஜ்ஹுத்தீன் புர்ஹானுத்தீன் (இப்பெரியார்கள் டில்லியிலேயே அடக்கமாயிருக்கிறார்கள்) ஆகியோரை தம் கட்டளையை அறிவிக்கும் பொருட்டு ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியாவிடத்திற்கு அனுப்பிவைத்தார்.

அவர்கள் ஒளலியாவிடத்திற்கு வந்து பாதுஷா கட்டளையை பின்வருமாறு எடுத்துரைத்தார்கள்:—

"அஸ்ஸலாமு அலைக்கும் ஹஸ்ரத் அவர்களே! தங்களுக்கு பாதுஷா எங்கள் மூலமாய் அனுப்பியுள்ள உத்தரவு

யாதெனில், தாங்கள் ஒவ்வொரு நாளும் அவரிடம்போய் அவரை முலாகத்து செய்து வரவேண்டும், ஒவ்வொரு நாளும் போக முடியா விட்டால் ஒருவாரத்திற்கு ஒருதடவையாவது அவரிடம் போய்வரவேண்டும். அவ்வாறு போய் வருவதற்கும் சௌகரியமில்லையாகில் பிரதி மாதத்தின் பிறைநாளில் அவரைக் கண்டு ஆசிர்வதித்து வரவேண்டும்" என்பது.

"தாங்கள் அவரை திருப்தி செய்யும் வழியில் அவரின் உத்தரவுக் கிணங்கபோக வர இருந்தால்தான் தங்களுக்கும் நன்மையுண்டு என்பது எங்களினதும் ஆலோசனை; இல்லையேல் அவர், தங்கள் விஷயத்தில் சதியாலோசனை செய்வார்போல் தெரிகிறது. இது எங்கள் சொந்த ஆலோசனையாகும்"

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்கள், யாவற்றையும் கேட்ட பின்பு சற்று நேரம் தாமதித்ததும் "இன்ஷா அல்லா" என்ற ஒரே பதிலை மாத்திரம் சொல்லி விட்டார்கள்.

ஒளலியா அவர்களின் 'இன்ஷா அல்லா' பதிலைக்கேட்ட தூதுவக் கோஷ்டியினர், ஹஸ்ரத் ஒளலியா பாதுஷாவின் உத்திரவிற் கிணங்க, நடந்து கொள்வதற்கு சம்மதித்துவிட்டார் என்றெண்ணி மிக்க சந்தோஷமடைந்து, பாதுஷாவிடம் போய், நிஜாமுத்தீன் ஒளலியா அவர்கள், தங்கள் உத்திரவுக்கு இணங்கி விட்டார்கள் என்று தெரிவித்ததைக் கேட்ட பாது ஷாவுக்கும் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

இந்த நிகழ்ச்சியானது ஸபர் மாதம் 27ந் தேதி நடந்தேறியது. அன்றே, (1) காஜா வஹீத்குறைஷி (2) ஹஸ்ரத் அமீர் குஸ்ரு அவர்களின் சகோதரரான ஏஸுத்தீன், இவ்விருவரும் ஒளலியா அவர்களின் சமூகத்தில் ஆஜராகி "ஷய்க் அவர்களே! தாங்கள் பாதுஷாவைகண்டு கொள்ளப்போவதற்கு இணங்கி விட்டதாக நாங்கள் கேள்வியுற்றோம், அது வாஸ்தவமா?" என்று கேட்டதற்கு,

"நான் என்பீர்மார்கள் (குருக்கள்) உத்தரவுக்கு மாறாக நடந்து கொள்ள முடியாது" என்று பதிலளிக்கவே, வினவியர்கள் திகைத்து விட்டார்கள்.

மேலும் அவர்கள் "இதென்ன அதிசயம்! உண்மையோ இப்படி இருக்க, அங்கே பாதுஷாவோ ஔலியா அவர்களின் தரிசனைக்கு காத்துக் கொண்டிருக்கிறார்; இவர்களோ போக மாட்டார்கள் எனத் தெரிகிறது. இது பற்றி இனி கிளர்ச்சி ஏற்படக் கூடுமோ" என்று நினைத்து வருந்தினர்கள். உடனே ஹஸ்ரத் ஔலியா அவர்கள் அந்த இருவர்களுக்கும் "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். பாதுஷா என்னை வெல்ல முடியாது' என்றார்கள்.

ஸபர் 29ந் தேதி வந்தது. ஹஸ்ரத் ஔலியா அவர்களின் ஊழியரான காஜா இக்பால் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் சமுகத்திற்குச் சென்று "ஹஸ்ரத்! தாங்கள் பாதுஷாவின் மூலாகத்திற்கு, போகவேண்டி யிருக்கிறதே, தங்களுடன் கொண்டு போவதற்கு ஏதேனும் காணிக்கைப் பொருள்கள் வேண்டியிருப்பின் சொல்லுங்கள், நான் அவைகளை விலைக்கு வாங்கி வருகிறேன்" என்று முறையிட்டார். அதைக்கேட்ட ஹஸ்ரத் ஔலியா அவர்கள் "தாமதியும், அஸ்ரு தொழுகை நேரம் ஆகட்டும்" என்று சொன்னார்கள்.

ஹஸ்ரத் ஔலியா அவர்கள் சொன்ன பிரகாரமே காஜா இக்பால், அஸ்ரு நேரங்கழித்து மறுபடியும் போய் கேட்ட போது, ஹஸ்ரத் எத்தகைய பதிலும் அவருக்குச் சொல்லாம லிருந்து விட்டபடியால், ஹஸ்ரத் அவர்கள் பாதுஷாவைக் கண்டு கொள்ள போகமாட்டார் போலிருக்கிறது என்று காஜா இக்பால் சந்தேகித்தார்.

நெருக்கடியான இவ்வேளையில் எல்லாம் வல்ல இறைவன் செயலும், அரும்பெரும் ஊர்தாக்களுடைய காரமத் (மகிமையும்)

பின் கண்ட சம்பவத்திலிருந்து நன்கு வெளியாகிறது. அதாவது இருந்தாற்போலிருந்து அங்கு என்ன சம்பவிக்கப் போகிறது என்பதை கவனிப்போம். ஹஸ்ரத் அவர்களோ போகவில்லை, இரவு அரைஜாமமும் ஆகிவிட்டது.

இத்தருணத்தில், கியாசுத்தீன் பாதுஷாவுக்கு கீழ்ப்பட்ட நம்பிக்கையுள்ள தளகர்த்தரும் 50000 போர் வீரர்களுக்கு அதிபதியாயுமிருந்து வந்தவர் இரகசியமாக படையெடுத்து வந்து மாளிகையில் உள்ள ஆயிரம் கால் மண்டபத்தினுள், ஜாஹர்பேக் என்பவனின் கைபட கியாசுத்தீன் பாதுஷாவையும் அவருடைய விசேஷ ஆலோசகரான காஜா முஹம்மத் பேக் என்பவரையும் வாளுக்கிரையாக்கினர். பாதுஷாவின் குழந்தைகளும் அதே சமயம் கொலை செய்யப்பட்டதாக சொல்லப் பட்டிருக்கிறது.

இச்சம்பவம் 1321-வது ஆண்டில் நிகழ்ந்துள்ளது. வெற்றியாளர் நான்கே வருஷம் ஆட்சி செலுத்தி விட்டு காலமானார்.

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்கள் விவரிக்கிறார்கள் :—நான் ஒரு தட்வை என் ஷய்க் அவர்களுடன் படகில் ஏறிச் சென்றேன். படகு ஓடிக் கொண்டிருக்கையிலே ஷய்க் என்னை தம் எதிரில் அழைத்து நீர் டில்லி நகரையடைந்த பின்னர் முஜாஹிதாவில் அதாவது இபாதத் வணக்கத்தில் ஈடுபட்டிருக்க வேண்டுமே யல்லாது நேரத்தை வீண் போக்கலாகாது, முஜாஹிதா ஸ்தானத்தை அடைய வேண்டிய பாதையின் அரைபாகம் நோன்பின் ஆதாரவைக் கொண்டது; மீதியான அரைவாசி பாதையை தொழுகை ஹஜ்ஜு இவற்றை கடை பிடித்து கழிக்க வேண்டும். நான் என் தேவைக்குரிய ஒவ்வொன்றையும் ஆண்டவனைக் கேட்டு அடைகிறேன். அப்படியே நீரும் வேண்டிய பொருளை ஆண்டவனை இறைஞ்சிக்

கேட்டு பெற வேண்டும். நான் உமக்காக உலக சம்பந்தமான வஸ்துக்களையும் ஆண்டவனிடம் சிறிதளவிற்கு கேட்டுள்ளேன்" என்றார்கள்.

ஒரு நாள் ஷய்க் அவர்கள் ஹுஜ்ரா (அறை வீடு) வில் இபாதத் செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் ஸஜ்தா செய்து விட்டு ஸஜ்தாவிலிருந்து தலை தூக்கினதும் என்னை உற்று நோக்கினார்கள். அச்சமயம் நான் அறைக்கு வெளியில் இருந்தேன். ஆனால் அவர்கள் என்னையே உற்று நோக்கினார்கள் என்பதை முன்னிட்டு நான் அவர்கள் அருகில் போய் மரியாதை செய்தேன், அப்போது அவர்கள் என்னைப் பார்த்து "உமக்கு இது சமயம் என்ன வேண்டுமோ அதை கேளும்" என்று வினவியபோது நான், என் ஈமானை அழகு படுத்துங்கள் என்று கேட்டேன். "அத்தகைய அழகு உமக்கு அருளாக்கப்பட்டது" என்ற பதிலை ஷய்க் அவர்கள் உடனே பகர்ந்தார்கள்.

ஹஸ்ரத் ஔலியா அவர்கள் பின்னர் ஆயாசத்துடன் சொல்லுவது யாதெனில்:—

"ஷய்க் அவர்கள் என்னை என்ன வேண்டுமெனக் கேட்ட போது, நான் 'ஸமா' என்னும் புகழ் பாடல் உணர்ச்சியின் இன்பத்திலேயே உயிரை விட்டு விடுமாறு தாங்கள் துவாச் செய்யுங்கள் என்று கேட்காமல் போனதற்கு வருந்துகிறேன்"

ஒரு தடவை ஒரு சிலர் ஒன்றுகூடி ஹஸ்ரத் ஔலியா வின் முலாகாத்திற்குச் (தரிசனைக்கு) செல்லவேண்டுமெனத் தீர்மானித்தார்கள்.

ஆனால், வெறுங்கையோடு போகாது அவர்களுக்கு மரி யாதை செய்வதன் மூலம் ஏதேனும் பதார்த்தங்களை தங்க ளுடன் கொண்டுபோக வேண்டும் என்பதற்காக அவரவர்கள்

இஷ்டம்போல் கடைகளிலுள்ள பதார்த்தங்களை விலைகொடுத்து வாங்க ஆரம்பித்தனர்.

ஆனால், அக்கோஷ்டியில் வுள்ள ஒருவருக்கு அவர்கள் காணிக்கைமுறை பிடிக்கவில்லை. அதனால் அவர் "சரிதான் நீங்கள் காணிக்கைக்குரிய பதார்த்தங்களை நீங்கள் சேர்ந்தாற் போல் ஔலியா அவர்களுக்கு முன் கொண்டுபோய் வைக்கப் போகிறீர்கள். நீங்கள் சேர்ந்தாற்போல் வைப்பது போலவே, ஹஸ்ரத் ஔலியா உடைய வேலைக்காரர்களும் அவற்றை சேர்ந்தாற்போல் எடுத்துக் கொண்டுபோய் விடுவார்கள். யார்? யார்? என்னென்ன கொண்டு வந்தார்களென்ற வித்தியாசம் அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது?" என்று சொல்லி தம் சார்பாக கொஞ்சம்போல் தரைமண் எடுத்து அதனை கடுதாசித் துண்டொன்றில் பொட்டலமாகக் கட்டிக் கொண்டு போய் எல்லோருடைய காணிக்கை பதார்த்தங்கள் வைக்கப் பட்டிருந்த விடத்தில் வைத்து விட்டார்.

அக்காணிக்கைகளை ஹஸ்ரத் ஔலியாவின் வேலைக்காரர் கள் அவர்கள் அனுமதியின் பேரில் ஒவ்வொன்றாக எடுத்துச் சோத்ததும் அப்பொட்டலத்தையும் எடுக்க கை தொட்ட போது ஹஸ்ரத் ஔலியா அவர்கள் "அதை தொடவேண் டாம், ஏனெனில் அது என் கண்களுக்கு போடவேண்டிய திவ்விய சர்மா" என்று மொழியவே, அதைக் கொண்டு வந்த தவர் மிகவும் வருந்தி தம் குற்றத்திற்கு மன்னிப்புக் கேட்டார்.

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் அந்த விசித்தர காணிக்கை கொண்டு வந்தவர் மீது கோபித்துக் கொள்வதற்கு பதிலாக 'உங்களுக்கு என்னால் ஆகவேண்டியதைச் சொல் லுங்கள்' என்று அன்பாய் மொழிந்தருளினார்கள்.

ஒரு தடவை, ஒருவர் ஹஸ்ரத் ஔலியா அவர்களைக் கண்டு கொள்வதற்காக தம் ஊரிலிருந்து புறப்பட்டார். அவர்

வரும் வழியில் 'பூந்தி' என்னும் ஓர் ஊர் இருந்தது. அவ்வூரில் ஷய்க் மோஹன் பெயருடைய மற்றொரு மஹான் விளங்கி வந்தார். அவரையும் தரிசித்து விட்டு போகலாம் என்ற எண்ணத்தின் பேரில் அவர் அம்மஹானிடம் சென்று அவரை தரிசித்தார். தரிசனைக்குப் பின் அந்த மஹான் "நீர் இங்கிருந்து நேரே எங்கே போகிறீர்?" எனக் கேட்டபோது "நான் நேரே ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா மஹபூபே இலாஹி, அவர்களை தரிசிக்க டில்லிக்குப் போகிறேன்" என்றுசொன்னார்.

"அப்படியா? ரொம்பவும் நல்ல காரியம், போனவுடன் ஹஸ்ரத் ஔலியா அவர்களுக்கு என் ஸலாம் சொல்லவும். 'வெள்ளிக்கிழமை இரவுகளில் தங்களை "கஅபா" வில் பார்ப்பார்களாமே, அவர் தங்களுக்கு ஸலாம் சொல்லச் சொன்னார்' என்று சொன்னால் அவர்கள் என்னை இன்னான் என்று தெரிந்து கொள்வார்கள்" என்று கோரினார். அவ்வாறே, அவர் டில்லிக்கு வந்து ஹஸ்ரத் ஔலியா அவர்களை தரிசித்து முடிந்ததும் ஷய்க் மோஹன் சார்பாக சலாம் சொல்லி அவர்கள் சொன்ன அடையாளத்தையும் விவரித்தார்கள்.

அதைக் கேட்ட ஹஸ்ரத் ஔலியா அவர்கள் "அந்த பகீர் என் அன்பினர்தான். ஆனால் அவர் இரகசியத்தை வெளிப்படுத்தி விடுகிறார்" என்று கூறினார்கள். இந்த சம்பவத்திலிருந்து ஷய்க் மோஹன் என்பவருடைய மேன்மையும் அவரது பதவியும் கவனிக்கத்தக்கது. இப்பெரியார் ஆகிய ஷய்க் மோஹன் அவர்களுடைய சமாதியும் "பூந்தி" பெயர்கொண்ட ஊரிலேயே அமைந்திருக்கிறது.

சுல்தான் அலாவுத்தீன் (ஷஹாபுத்தீன் குமாரர்) பாதுஷாவின் குணதிசயங்கள் சிறப்புற்று விளங்கிவந்த உண்மையை உலகத்தினர் பெரும்பாலரும் அறிவர். அவர் தம் விசேஷ சாமார்த்தியத் துறையில் தம்மை இரண்டாவது அலெக்ஸான்

டார் என்றும் கூறி வந்தார். அரசியல் நிபுணத்துவத்தில் மாத்திரமன்றி கல்வி யறிவிலும் மதக் கொள்கையின் கட்டுப்பாட்டிலும் சிறப்புற்றிருந்தார்.

இவர் 22 வருஷ காலம் மிக்க நீதி நெறியுடன் ராஜீய பரிபாலனம் செய்து வந்தவர். இப்படி யிருக்க, ஒரு நாள் இவர் தம் சோதனையின் பொருட்டு ஹஸ்ரத் ஒளலியா அவர்கள் சமுகத்திற்கு தம் ராஜ்ய சம்பந்தமாயுள்ள சில விஷயங்களை எழுதி அதற்கான பதிலை ஒளலியா அவர்களிடமிருந்து வேண்டினார். அதாவது :—

“ஹஸ்ரத் அவர்களே! தாங்கள் உலக மக்களுக்கிடையும் மேன்மை வாய்ந்திருக்கிறீர்கள்.

இகபர தேவைகள் அனைத்தும் தங்கள் அனுக்கிரகத்தால் நிறைவேறுகின்றன. நல்ல இறைவன் உலக ஆட்சியின் சக்தியை எனக்கு அருள் புரிந்துள்ளான். ஆனால் தேசிய அலுவல்களை யாவும் எதை எப்படிச் செய்வது கிரமம் என்பதன் ஆலோசனையைப் பெறுவதற்கு நான் அதனை (பிரச்னையை) அவ்வப்போது தங்கள் சமுகத்தில் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

நான் எப்படிச் செய்தால் என் குடி ஜனங்களுக்கு கதிமோக்ஷம் உண்டு என்பதற்கான முறையில் தாங்கள் நான் பிறப்பிக்கும் கட்டளைகளுக்கிடை ஒவ்வொன்றின் கீழ் அதற்குரிய ஹதீது இன்னதெனக் குறித்து எனக்கு அனுப்பி வைப்பீர்களாக”

மேற் சொல்லிய விஷய மடங்கிய விண்ணப்பக் கடிதத்தை எழுதி பாதுஷா, அதை தம் சிறிய குமாரரும் ஹஸ்ரத் ஒளலியா அவர்களின் முரீதுமாகிய கிஸர்கான் கைபட ஹஸ்ரத் ஒளலியா அவர்களுக்கு அனுப்பி வைத்தார். ஹஸரத் அவர்களுடைய பதிலும் கொண்டு வருமாறு கிஸர்கானுக்கு சொல்

லப்பட்டது. விண்ணப்பக் கடிதத்தைக் கொண்டு போன கிஸர்கான் அதை ஹஸரத் ஔலியா அவர்கள் கையில் கொடுத்தார்.

ஹஸரத் அவர்கள் அதை வாசித்துப் பார்த்தவுடன் அச்சமயம் அங்கு கூடி யிருந்தவர்களை நோக்கி "பாத்திஹா ஓதுங்கள்" என மொழிந்தார்கள்

அடுத்த படியாக ஹஸரத் ஔலியா அவர்கள் "பகீர்க்கு பாதுஷாக்களுடைய அலுவல்களில் கிஞ்சித்தும் சம்பந்தம் கிடையாது. நானோ ஓர் பகீர், நகரத்தைச் சேர்ந்த ஏதோ ஒரு மூலையில் கிடக்கிறேன். பாதுஷாவுக்காகவும் இதர முஸ்லிம்களுக்காகவும் துஆச் செய்த வண்ணமா இருந்து வருகிறேன்.

இந்நிலைமையில், பாதுஷா என்னை தம அலுவல்களில் ஈடு படுமாறு மீண்டும் வற்புறுத்துவாரானால் நான் இனி இங்கு வசிக்க முடியாது. அல்லா உடைய பூமி விஸ்தாரமானது" என்ற சங்கதியை எழுதி அதை கிஸர்கான் வசமாகவே பாதுஷாவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

கிஸர்கான், அக்கடிதத்தை பாதுஷாவுக்கு சேர்ப்பித்த போது அவர் அதை படித்துப் பார்த்து வெகு சந்தோஷப் பட்டார். ஹஸ்ரத் ஔலியாவுடைய ஆண்டவன் பயபக்தியும் அவர்களது மனத் தூய்மையும் இன்ன தரத்திலுள்ளவை என்ற இரகசியம் அவருக்கு நன்கு விளங்கியது.

அதன் பேரில், பாதுஷா (சுல்தான் அலாவுத்தீன்) மிக்க விசுவாசத்துடன் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் அவர்கள் சந்நிதானத்தை யடைந்து அவரது புனித முலாகத்தினால் (தரிசினையால்) சிறப்புறுவதற்கான நோக்கத்துடன் தாம் வருவதற்குரிய அனுமதி யளிக்குமாறு ஹஸ்ரத் ஔலியா விடத்தில் மற்றொரு தூதர் மூலமாய் வேண்டிக் கொண்டார்.

ஆனால் இச்சமயத்திலும் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் பாதுஷாவுக்கு அனுமதியளிக்க மறுத்து விட்டார்கள்.

"பாதுஷா என்னிடத்திற்கு வரவேண்டிய அவசியமே இல்லை. நானே அவருக்கு மறை முகமாய் இருந்து கொண்டே அவருக்காக துஆச் செய்கிறேன். மறைமுகமாய் செய்யப் படும் துஆவில் தான் அதிக பலன் உண்டு. அன்றியும், என் வீட்டிற்கு முன் வழி ஒன்றும் பின் வழி ஒன்றும் ஆக இரண்டு வழிகள் (வாயல்கள்) உண்டு. என்னை கண்டுகொள்ள பாதுஷா என் வீட்டிற்கு வருவதாக இருந்தால் அவர், ஒரு வாயலின் வழியே வீட்டிற்குள் நுழைந்தார் எனத் தெரிந்ததும் நான் மற்றோர் வாயலின் வழியே ஓடிப் போய் விடுவேன்" என்ற பதில் ஔலியா அவர்கள் சார்பாக பாதுஷாவுக்கு அனுப்பப்பட்டது.

பாதுஷாவான கியாசுத்தீன் தக்லக் 1321-வது ஆண்டில் அரசுரிமை பெற்றார். சிறிது காலத்திற்குப்பின் அவர் வங்காளத்தின் மீது படை யெடுத்துச் சென்றார். அவர் தம் பிரயாணத்தின் வழியிலேயே ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களுக்கு "நான் கியாஸ் பூருக்கு வந்து சேருவதற்கு முன்னமே நீங்கள் அந்த ஊரை விட்டுச் சென்று விட வேண்டும். ஏனெனில், உங்களிடம் சதா ஜனங்கள் வரப்போக யிருப்பதால் என்னைச் சேர்ந்தவர்களுக்கு இடம் கிடைப்பது திண்டாட்டமாய் விடுகிறது" என்ற கடிதத்தை எழுதி யனுப்பினர்.

ஹஸ்ரத் ஔலியா அவர்களிடம் அக்கடிதம் சேர்ந்த போது அவர்கள் அதை வாசித்துப் பார்த்ததும் "டில்லி இன்னமும் தூரத்திலிருக்கிறது" என்றார்கள். அவர்கள் சொல்வாக்குக் கேற்ப பாதுஷா டில்லிக்குப் போய்ச் சேரவில்லை. முதலில் அவர், தக்லக் ஆபாத் வந்தார். அங்கு

அவர் நான்காவது வருஷத்திய வலத்தின் போது கட்டிடத்தின் கீழாக அகப்பட்டு இறந்தார்.

ஒருவர் ஹஸ்ரத் ஔலியா அவர்களிடம் "நான் சொற்பொழிவு ஆற்றும் போது தங்கள் நண்பர்களுள் சிலர் அதை கேட்காமல் சங்கீதத்தை செவியுறுகிறார்கள்" என்று குறை கூறினார். அதற்கு ஹஸ்ரத் அவர்கள் "அப்படியாகில், நான் அவர்களை கண்டிப்பேன். ஒரு காரியத்திற்கு இடையூறாக நிற்கும் மற்றொரு காரியத்தை மேற் கொள்ளல் தவறு"

மஷாயக்மார்கள் ஒழுக வேண்டிய ஒழுக்கங்களைப்பற்றி கூறுகையில் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் பின்வரும் நிகழ்ச்சியைப் பற்றியும் குறிப்பிட்டார்கள் :—

அதாவது ஒருசமயம் ஷய்க் வஹீதுத்தீன் கிர்மானி என்ற பெரியார், ஷய்க் ஷஹாபுத்தீன் நாமமுள்ள மஹானிடத்திற்கு வந்தார்கள். அது சமயம் ஷய்க் ஷஹாபுத்தீன் அவர்கள் தமது தொழுகை விரிப்பையும் சுருட்டி தம் தலையின் கீழ் வைத்தார்கள். தாம் தொழுகாளி என்பதைக் காண்பித்தல் கூடாது என்றெண்ணியே அப்படிச் செய்தார்கள். அது மஷாயக்மார்களுக்கிடை பிறரை கௌரவப் படுத்தத்தக்க செயலாகும்.

பிறகு, ஷய்க் வஹீதுத்தீன் கிர்மானி அவர்கள் 'ஸமா' (புகழ்ப்பாடல் சபை) நடத்த வேண்டுமென ஷஹாபுத்தீன் அவர்களை கேட்டுக் கொண்டார்கள். அவரது வேண்டுகோளுக்கிணங்க புலவர்கள் அழைக்கப்பட்டு ஸமா ஒழுங்கான முறையில் ஆரம்பமாயிற்று. அப்போது ஷஹாபுத்தீன் அவர்கள் ஒதுக்கமானதோர் மூலையில் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் ஷய்க் ஷாஹாபுத்தீனைக் குறித்து "ஸமா" மஜ்லிஸில் எத்தனை அடிப்படையான நல்லம்சங்கள் உண்டோ

அவை அனைத்தையும் நான் ஷய்க் ஷஹாபுத்தீனிலேயே இருக்கக் கண்டேன் என்றார்கள். இத்தருணத்தில் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் கண்ணீர் விட்டுச் சொன்னார்கள், "புகழத் தக்க அம்மஹானின் சமீப காலத்திற்கு முன்னரே காலமானார்."

ஒரு தடவை ஹஸ்ரத் ஔலியா அவர்களின் ஆசிரமத்தில் 'ஸமா' விசேஷ கொந்தளிப்பான நிலைமையில் நடந்து கொண்டிருக்கும் சமயம் சூபி என்று வழங்கப்பட்டு வந்த மெய்ஞானி ஒருவர், "ஆ" என பெருமூர்ச்சை அடையவே, அவர் சரீரம் குபீர் என எரிந்து சம்பலாகி விட்டது.

ஹஸ்ரத் ஔலியா அவர்கள் அச்சமயம் பிரக்ஞையற்றிருந்தார்கள். கொஞ்ச நேரத்திற்குப் பின் பிரக்ஞை ஏற்பட்டதும் அந்த சாம்பலைச் சுட்டிக் காட்டி இது என்ன? எனக்கேட்ட போது "ஒருவர், ஸமாவின் போது பெரும் மூர்ச்சிட்டு அதன் பலனாக வெந்து சாம்பலாகி விட்டார்" என்று விவரிக்கப்பட்ட சமயம் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரும்படி சொன்னார்கள்.

தண்ணீர் வந்தவுடன் ஹஸ்ரத் அவர்கள் அந்த சாம்பலின் மீது தண்ணீர் தெளிக்கவே இறந்த சூபிக்கு புத்துயிர் உண்டாகி அவர் ஏற்கெனவேயுள்ள சரீரத்துடன் எழுந்து உட்கார்ந்தார்.

சூபி உட்கார்ந்ததும் ஔலியா அவர்கள் சூபியை நோக்கி "உம்மில் இன்னமும் ஸமாவிற்கான தேர்ச்சிக்குறை இருந்து வருவதால், அக்குறை நீங்கி உம்முடைய உள்ளத்தில் போதிய சகிப்புத் தன்மை ஏற்படும் வரையில் நம்முடைய ஸமா மஜ்லிசுக்கு நீர் இனி மேல் வரவேண்டாம்" என்று போதித்தார்கள்.

ஒரு தடவை ஹஸ்ரத் ஔலியா அவர்கள் ஹஸ்ரத் காஜா குத்புத்தீன் பக்தியார்காகி அவர்களின் சமாதியின் தரிசனைக்காக அவர்கள் சமாதிக்குப் போய் திரும்பி வருகையில் ஆற்றோரமாய் பிரபல கவிஞரான மீர் ஹஸன் அலாயி சஞ்சரியைக் கண்டார்கள். அச்சமயம், மீர் ஹஸன் என்பவர், தம் தோழர்களுடன் சேர்ந்து மிக்க மகிழ்ச்சியுடன் சாராயம் குடித்துக் கொண்டிருந்தார்.

அவர் ஹஸ்ரத் அவர்களைப் பார்த்ததும் அச்சந்தர்ப்பத்திற்குரிய பாடலொன்றை பாடினார். அதைக் கேட்டதும் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் "சேர்க்கையின் பயன் உம்மை விட்டும் போய் விடுமோ?" எனக் கேட்டார்கள். அப்போது மீர் ஹஸன் மனதில் அம்மொழிகள் பெரிதும் உணர்ச்சியை உண்டு பண்ணின. அதன் பேரில், அவர், ஓடி வந்து, ஹஸ்ரத் ஔலியா அவர்களின் பாதங்களை முத்தமிட்டு, தாம் இனி மேல், மதுபானம் அருந்தாமல் இருப்பதற்கு தவ்பாச் செய்து, ஹஸ்ரத் ஔலியா அவர்களிடம் முரீதும் வாங்கிக் கொண்டார். அவர், தவ்பாச் செய்து சன்மார்க்கத்தை கடைபிடித்த சமயம் அவருக்கு வயது 72, எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஹஸ்ரத் அவர்களின் அனுக்கிரகப் பார்வை அவரை பரிபூரணமாக்கி விட்டது.

ஷம்சுத்தீன் பஸ்ஸாஸி என்பவர், மிக்க செருக்குப் படைத்தவர். அன்னார் ஹஸ்ரத் ஔலியா விடத்தில் சற்று விரோதங் கொண்டிருந்தார். ஒரு நாள் அவர், 'ஸப்ஸ் மண்டி' என வழங்கப்பட்டு வந்த கடைத்தெருவுக் கருகில் மதுபானத்தை அருந்த எண்ணங் கொண்டபோது திடீரென தமக்கெதிரில் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் நின்று கொண்டு, 'ஏ! அதை குடிக்காதே' என தம் கையால் சமிக்ஞை செய்வதை கண்டார், ஹஸ்ரத் அவர்களின் கண்பார்வையில் அவருடைய

பார்வையும் அச்சமயம் ஒன்றாய் தரிபட்டது. உடனே அவர் தம் மதுபான பாத்திரங்களை யாவும் தூக்கிப் போட்டு உடைத்ததும், ஹஸ்ரத் ஒளலியா அவர்களிடம் ஓடி வந்து "நல்லதிர்ஷ்ட மிருந்தால் யாதொரு சீர்திருத்தச் சம்பவம் எப்போதேனும் நேரிட்டுவிடும், என்று தாங்கள் சொல்லி வந்தீர்களே அதன் பிரகாரம் இன்று என் கொள்கைகளில் சீர்திருத்தம் ஏற்படலாயிற்று" என்று முறையிட்ட பின்னர் ஹஸ்ரத் அவர்களின் சமுகத்தில் முரீது பாக்கியத்தையும் அடையப் பெற்றார்.

ஹஸ்ரத் ஒளலியா அவர்களின் யாதொரு முரீதுடைய வீட்டில் ஒரு நாள் 'ஸமா' நடைபெற்றது. ஸமாவின் பொருட்டு அந்த வீட்டுக்காரர் எல்லோருக்கும் சாப்பாடு விருந்து வைக்கவும் ஏற்பாடு செய்திருந்தார்.

ஆனால், ஸமாவில் எதிர்பாரா வண்ணம் சூபிமார்களும், பிரமுகர்களும் ஏனைய மக்களும் ஆயிரக்கணக்கில் வந்து கூடி விட்டமையால் தயாரித்த சாப்பாட்டை யாருக்கிடை வைப்பது எனத் தெரியாமல் வீட்டுகாரர் திகைத்துப் போனார். ஹஸ்ரத் ஒளலியா அவர்கள் தம் அந்தரங்க சக்தியைக் கொண்டு அதனையறிந்து காஜா முபஷ்ஷிர் நாமமுள்ள பிரதம வேலைக்காரனை கூப்பிட்டு பின்வருமாறு ஆலோசனை கூறினார்கள்:—

"விருந்தினரை பந்தியில் உட்கார வைத்து கைகழுவச் செய்ததும் ஒரு ரொட்டியை நான்கு துண்டுகளாக்கி, அதை போர்வைக்குள் வைத்து 'பிஸ்மில்லா' ஓதியபின் அவைகளை விருந்தினருக்கு முன்னுள்ள தட்டு பாத்திரத்தில் பகிர்ந்து வண்ணம் வைத்துக் கொண்டு போகவும்"

அவ்வாறே செய்யப்பட்ட போது 50 பேருக்கு சமைக்கப் பட்ட சாப்பாடு (ரொட்டி) ஆயிரக்கணக்கான விருந்தாளிகளையும் சமாளித்துக் கொண்டது.

ஒரு தடவை 'ஸமாவா' என்ற கஸ்பாவில் உள்ள ஜாகீர் தார் ஒருவர் வீடு தீ விபத்திற்குள்ளாயிற்று. சர்க்கார் சார்பாக அவருக்கு கொடுக்கப் பட்டிருந்த மான்னிய தஸ்தாவேஜும் தீ விபத்தினால் எரிந்து சம்பலாய் போய் விட்டதனால், பாவம். அந்த வீடு இழந்தவர் அந்த தஸ்தாவேஜின் நகலொன்றை பெறுவதற்காக டில்லிக்கு வந்தார். புதிய தோரணையில் அரும் பாடு பட்ட பின்னர் அதன் பிரதி யொன்று அவருக்கு கிடைத்தது.

ஆனால் சுல்தான் உடைய ஆபிஸிலிருந்து அவர் அதை பெற்றுக் கொண்டு வெளி வந்ததும் தம் அஜாக்கிரதையினால் அதை எங்கேயோ நழுவ விட்டு மீண்டும் அதை இழந்து போனார். பிறகு எங்கெங்கேயோ தேடிப்பார்த்தும் கிடைக்காமற் போகவே, கடைசியாக அழுது கொண்டு ஹஸ்ரத் ஒளலியா அவர்களின் சமூகத்திற்கு வந்து முறையிட்டார்! மேலும் அது கிடைக்கும்படி துவா செய்யுமாறும் வேண்டிக் கொண்டார்.

அதைச் செவியுற்ற ஹஸ்ரத் ஒளலியா அவர்கள் புன்னகைப்புடன் "நீர் கடைக்குப் போய் ஹல்வா வாங்கி வந்து அதை பாபா சாஹிப் ஒளலியாவின் பெற்றோர் பெயரால் பாத்திஹா ஓதும். அந்த தஸ்தாவேஜு கடுதாசி உமக்கு கிடைத்து விடும்" என்று உபதேசித்தார்கள். ஆதலால் உடனே, அவர் கடைத் தெருவுக்குப் போய் ஆச்சிரமத்திற்கு சமீபமாகவே நிலை கொண்டிருந்த ஓர் ஹல்வா கடையில் ஹல்வா வாங்கினார்.

அவர் கேட்ட அளவின் ஹல்வாவை தராசில் நிறுத்திய பின்னர், அதை கட்டிக் கொடுப்பதற்காக கடைக்காரன் கடுதாசி யொன்றை கையிலெடுத்து அதை கிழிக்கச் சென்றபோது அந்தோ! அதுவே இழந்தவரின் தஸ்தாவேஜு நகல் கடுதாசி எனத் தெரிந்தது.

உடனே அவர் "ஓகோ! அதை கிழித்து விடாதே" என்று கதறினர். அப்பால், அவர் ஹூல்வாலையும், தஸ்தாவேஜு கடுதாசியையும் தனித்தனியே கொண்டு வந்து ஹஸ்ரத் ஔலியா அவர்களின் சமுகததில் சமர்ப்பித்து அவர்களைப் போற்றி தானும் அவர்களது முரீதாகி விட்டார்.

சுல்தான் அலாவுத்தீன் கில்ஜி என்பவர், ஹஸ்ரத் நிஜா முத்தீன் ஔலியா அவர்களை எப்படியாவது தம்மிடத்திற்கு அழைக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டு ஒருவர் வாயலாய் பின்வருமாறு செய்தி சொல்லி யனுப்பினர்:—

"முக்கியமானதோர் யுத்த களத்திற்குச் சென்ற என் போர் வீரர்களைப் பற்றி யாதொரு தகவலும் எனக்குக் கிடைக்க வில்லை. அவர்கள் புறப்பட்டுப் போய் நீண்ட நாளாகிறது. எனக்கு எந்நேரமும் அதே கவலையாக யிருப்பதால் தாங்கள் தயை கூர்ந்து சொற்ப நேரத்திற்கேனும் என்னிடத்திற்கு விஜயம் செய்தால் தங்கள் பேருதவியாகும்." ஹஸ்ரத் அவர்கள் அச்செய்தியைக் கேட்டதும் சிறிது நேரம் வரையில் தலை குனிந்து பேசாதிருந்தார்கள்.

பின்னர் தலையை நிமிர்த்தி "நான் அங்கே வரவேண்டும் என்ற அவசியமில்லை. இன்ஷா அல்லா நாளை விடியற்காலை உங்களுக்கு அது பற்றி தகவல் கிடைத்து விடும். போர்களத் திற்குச் சென்றிருக்கும் உங்கள் சகோதரன் 'அலிப்கான்' பூர்ண சரீர சௌக்யத்துடனேயே விரோதிகளிட மிருந்து கைப்பற்றப்பட்ட சாமான்களுடன் பெரும் மகிழ்ச்சியோடுங் கூடி உங்களை சந்திக்க வருவான்" என்று பதிலனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் ஔலியா அவர்கள் சொல்லி யனுப்பிய பிர காரமே, மறுதினம் அலிப்கான் குதூகலமான வெற்றியின் மகிழ்ச்சியுடனே தர்பாருக்கு வந்து சுல்தான் சேனையில்

அமர்ந்தார். சுல்தானும் தம் சகோதாரின் அபார வெற்றிக்காக அளவிலா மகிழ்ச்சியுற்று 5000 தினார் நாணயங்களை கூய்க் அவர்கள் சமுகத்திற்கு காணிக்கை அனுப்பித் தந்தார். அந் தொகை கிடைத்த சமயமே 'அஸ்பந்தயார் கலந்தர்' என்ற கலந்தர் பகிர் ஹஸ்ரத் அவர்கள் சமுகத்திற்கு வந்து விட்ட படியால் ஹஸ்ரத் அவர்கள் அந்த தொகை முழுவதையும் அவருக்கு கொடுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ஔலியா அவர்களுக்கு நிக்காஹ் ஆகவில்லை. ஆயுள் முழுவதையும் தன்னந்தனியாகவே கழித்தார்கள். இதை யொட்டி ஆராய்ந்தறிந்தோர் அடியில் வருமாறு கூறி யள்ளார்கள் :—

ஒரு நாள் ஹஸ்ரத் ஔலியா அவர்கள், அஜாமுத்ஹனின் இருந்து வந்த சமயம் அவர்கள் முர்ஷித் அவர்கள், சாப்பிடு வதற்காக ஏதேனும் ஆகாரம் கொண்டு வந்து கொடுக்குமாறு ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியாவுக்கு உத்தரவு செய்தார்கள்.

அதன் பேரில், ஹஸ்ரத் ஔலியா அவர்கள், தம் தலைப் பாகையை அடகு வைத்து அந்த பணத்தி லிருந்து தட்டப் பயிறும், உப்பும் விலைக்கு வாங்கி தட்டப் பயிறுடன் உப்பை போட்டு அவிழ்த்து, அதை கொண்டு போய் முர்ஷித் அவர் களுக்கு எதிரில் வைத்தார்கள். முர்ஷித் அவர்கள், அச்சமயம் அங்கு வீற்றிருந்த தோழர்களுடன் சேர்ந்து, அதை புசிக்கத் தொடங்கினார்கள். புசிக்கும் சமயத்தில் "நிஜாமுத்தீன் இதில் உப்பையும் போட்டு எவ்வளவு நன்றாய் அவித்துக் கொண்டு வந்திருக்கிறார். ஆனது பற்றி, அவரது 'லங்கர்கானு' (அன்ன தான நிலையம்)விலிருந்து அனுதினமும் 73 மணங்கு உப்பு செலவாகும் அந்தஸ்து ஏற்பட வேண்டுமென நான் எல்லாம் வல்ல இறைவனிடம் துஆச் செய்கிறேன்" என்று ஆசிர் வதித்த போது ஹஸ்ரத் ஔலியா அவர்கள் எழுந்து நின்று

ஸலாம் செய்தார்கள். ஹஸ்ரத் ஔலியா அவர்கள், தம் முர்ஷி திற்கு ஸலாம் செய்ய எழுந்திருந்த போது அவர்களது கால் சல்லடம் கிழிந்திருந்ததாக முர்ஷித் அவர்களுக்குத் தெரிந் தது. அவ்வாறு தெரியவே, முர்ஷித் அவர்கள், அதே சமயம் தம்முடைய சல்லடத்தைக் கொடுத்து அதை அணியச் சொன் ஞர்கள்

ஹஸ்ரத் ஔலியா அவர்கள் அச்சல்லடத்திற்கு கௌர வப்படுத்தும் நோக்கத்துடன் அதை ஏற்கனவேயுள்ள தம் சல்லடத்திற்கு மேல் அணிந்தார்கள்.

ஆனால் அவர்கள் அதை அவசரப்பட்டு அணிந்ததன் காரணமாக சல்லட நாடாவின் ஒரு தலைப்பு சல்லடத்தின் ஒரு துவார வழியே வெளிவந்து விட்டது. அதைக் கண்ட முர்ஷித் அவர்கள் "சல்லட நாடாவை இறுக்கமாகக் கட்டும்" என்று சொன்ன போது "இன்ஷா அல்லா அப்படியே கட்டுகிறேன்" என்று ஹஸ்ரத் அவர்கள் பதில் கூறினார்கள்.

இதிலிருந்து நாடா கட்டுக் கடங்காமல் உருவிப்போன தானது அவர்களும் மனைவியைக் கட்டிக் கொள்ளப்போவதில்லை என்ற அறிகுறியாகும் என சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களைப்பற்றிய பிரஸ்தாபம் அதிகரித்துக் கொண்டிருப்பதை மக்காவாசிகள் கேள்வியுற்றார்கள். ஆனால் ஹஸ்ரத் அவர்கள் 'ஹஜ்ஜு' நிறை வேற்றவில்லை என்ற குறையைப்பற்றி அவர்கள் எடுத்துரைத்த போது அதே சமயம் அவ்விடம் ஆஜராகவிருந்த இரண்டு பெரியார்கள் அதைப்பற்றி தாக்கிப் பேசினார்கள்.

அவர்கள் தாக்கிப் பேசிய மறுப்பு விஷயம் யாதெனில்:— "நாங்கள் சென்ற நாற்பது வருஷங்களாயும் கஃபாவின் முஜாவிர்களாக இருந்து வருகிறோம். மௌலானா நிஜாமுத்

தின் காலைத் தொழுகையை அனுதினமும் கஃபா பள்ளிவாச லில் ஜமாஅத்துடன் குறித்த நேரத்தில் தொழுது கொள்ளு கிறார் என்பதை நாம் பார்த்து வருகிறோம்."

முஜாவிர்கள் சொல்லிய சாட்சியத்தின் பிரஸ்தாபத்தை மக்காவாசிகள் மாத்திரமின்றி டில்லி ஹாஜிகளும் செவியுற்று ஹஜ்ரத் ஒளலியா அவர்களின் முரீதுகளுக்கு அவ்வதிசயத் தைப் பற்றி விவரித்தார்கள்.

ஆனால் அதை செவியுற்றவர்களுள் யாருக்கேனும் அதைப் பற்றி ஹஸ்ரத் ஒளலியா சமுகத்தில் விசாரிக்கும்படியான துணிச்சல் அப்போது ஏற்படவில்லையாதலால் எல்லோரும் மௌனஞ் சாதித்தனர்.

ஒரு முறை ஹஸ்ரத் ஒளலியா அவர்கள் தம் ஹுஜ்ரா வில் (அறையில்) வீற்றிருந்தார்கள். அவ்வமயம் அவர்களின் முரீதொருவர் உளுச்செய்வதற்காக பாத்திரத்தில் ஜலத்தை ஊற்றிக்கொண்டு அறை வாயில் காத்துக்கொண்டிருந்தார். வெகு நேரம் சென்றபின்னரும் ஹஸ்ரத் அவர்கள் அந்த ஊழியரிடமிருந்து ஜலம் வாங்கிக் கொள்ளாததால், ஒருக்கால் ஹஸ்ரத் அவர்கள் மெத்தை வீட்டில் இருப்பார்களோ என்ற சந்தேகத்தின் பேரில் அவர் முதலில் அறைக்குள் நுழைந்து பார்த்தார். அப்பால் மெத்தைக்குச் சென்று எப்புறமும் தேடினர், எந்த தோரிடத்திலும் ஹஸ்ரத் அவர்கள் இல்லை எனத் தெரிந்ததும், அவர், அறை வீட்டின் வழியே வெளி வந்து அறையின் கதவையும் வெளிப்பக்கத்தில் தாழ்பாளிட்டு, முன்னர் நின்று கொண்டிருந்த விடத்திலேயே மறுபடியும் நின்று விட்டார். கதவை தாழ்பாளிட்ட சிறிது நேரத்திற்குள் ஹஸ்ரத் ஒளலியா அவர்கள், ஊழியரைக் கூப்பிட்டு தண்ணீர் கேட்டார்கள். ஊழியர் ஹஸ்ரத் சத்தத்தைக்கேட்டு பிரமித்து விட்டார்.

ஹஸ்ரத் அவர்கள் எங்கும் தென்படாமற் போனபோது அவர்கள் நிச்சயமாகவே தொழுகைக்காக 'க்அபா' பள்ளிக்கு போயிருப்பார்கள் என்றும், ஹாஜிகள் வாயலாய் தாம் அது பற்றி கேட்ட விஷயம் உண்மைதான் என்றும் நம்பவும் அவ ருக்கு தம் மனமே சாட்சியாய் விட்டது.

அப்பால், அவர் ஹஸ்ரத் ஔலியா விடத்தில் " நான் தங்களை தேடியபோது தாங்கள் தென்படாமல், கதவை தாழ் பாளிட்டதும் தாங்கள் எங்கிருந்தோ வந்து என்னைக் கூப்பிட் டீர்கள், நான் தங்களைப்பற்றி கேள்விப்பட்டதற்கும் இப்போது நான் பார்த்த அதிசய சம்பவத்திற்கும் கவனிக்குமிடத்து தாங்கள் 'கஅபா' பள்ளிக்கே போயிருப்பீர்கள் என்று நம்புகி றேன்" என்று பயந்தும் ஒடுங்கியும் முறையிட்டார்.

அதைக்கேட்ட ஹஸ்ரத் ஔலியா அவர்கள் கண்களில் நீர் ததும்பியது, "நான் அத்தகைய மகிமைக்கு தகுதி வாய்ந்த வனல்ல. ஆனால் இது ஏதோ ஆண்டவன் கிருபைக் கொண்டு நடக்கிறது அதாவது இந்த வீட்டின் கூரையிலிருந்து ஒரு பெண் ஒட்டை இறங்கி வந்து என்னை தன் முதுகின்மேல் ஏற்றிக்கொண்டு நேரே 'கஅபா' வுக்குப் போகிறது. அங்கு நான் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டவுடன் அவ் வொட்டை அதே விதமாக என்னை மீண்டும் ஏற்றிக்கொண்டு இங்கு கொண்டு வந்து சேர்ப்பித்து விடுகிறது" என்று விவரித்தார்கள்.

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களுக்கு 91-வது பிராயம் எட்டியது. இப்போது அவர்களுக்கு இருந்தாற்போ லிருந்து 7 நாள்வரை மலஜல பாதைகள் தடைப்பட்டன.

8-வது தினம் ஹஸரத் ஔலியா அவர்கள், தம் சொந்த காரியஸ்தரான காஜா இக்பாலை தம்மிடம் அழைத்து 'உம் வசத்தில் இருக்கப்பட்ட சொந்த பணத்தை எனக்கெதிரில்

கொண்டு வந்து வையும்' என்று உத்தரவளித்த போது அவர் "ரொக்க பணம் ஏது? அதுவோ அன்றாடம் செலவழிந்து போகிறது. ஆனால் இன்றைய அவசியத்திற்குரிய தானியம் ஆயிரம் மணங்கு தயாரா யிருக்கிறது" என்றபோது "அதை யாவது இப்போது கொண்டு வந்து ஏழை மிஸ்கீன்களுக்கிடை பகிர்ந்து விடும்" என்று ஆக்ஞாபித்தார்கள்.

அடுத்தாற் போல் ஹஸ்ரத் அவர்கள் மூட்டை எடுத்து வரும்படிச் சொல்லி அதிலிருந்து தலைப்பாகை 1, சட்டை 1, தொழுகை விரிப்பு 1, கிலாபத் அத்தாட்சிப் பத்திரம் 1 இவைகளை எளிய மௌலானா புர்ஹானுத்தீன் அவர்களுக்கு அருள் புரிந்து அவர்களை தென் திசைக்கு புறப்பட்டு போகும் படியும் உத்தரவிடப்பட்டது.

அதே போல் இதர ஒவ்வொரு கலீபாவுக்கும் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் ஆடையளித்தார்கள்.

இச்சமயம் ஹஸ்ரத் ஷய்க் நஸீருத்தீன் சிராகெதெஹலீ (டில்லியின் விளக்கு) ஆஜராகாததால் சபையோர்களுக்கு கவலை ஏற்பட்டது. அதன் பேரில், ஹஸ்ரத் ஔலியா அவர்கள் ஹஸ்ரத் ஷெய்க் நஸீருத்தீன் அவர்களை தருவித்து "சிஷ்திய்யா" வமிசத்தில் பாரம்பரையாக வழங்கப்பட்டு வந்த தபர்ருகாத்' (அரிய பொருள்கள்) யாவும் அவர்களுக்கு கொடுத்தார்கள். ஹஸ்ரத் ஔலியா அவர்களுக்கு அவர் களது முர்ஷித் அருள் புரிந்த சில புனித சின்னங்களும் இச்சமயம் ஷய்க் நஸீருத்தீன் அவர்களுக்கு அருளப்பட்டன. இந்த அலுவல்கள் அஸ்ரு தொழுகை நேரத்திற்கு முன்னரே முடிவுற்றன.

அப்பால் அஸ்ரு தொழுகை நேரம் முடிந்து சூரியன் அஸ்தமனமாகும் தறுவாயில் இந்த இர்பான் சூரியனாகிய ஹஸ்ரத்

நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் இம்மண்ணுலகை விட்டும் விண்ணுலகிற்கு எய்தினார்கள்.

அவர்கள் மரண சம்பவம் 725-வது ஆண்டு ரபீயுல் ஆகிர் பிறை 17-ந் தேதி புதன் கிழமை தினம் நிகழ்ந்துள்ளது. ஹஸ்ரத் அவர்களின் வயது 94 என்றும் சிலர் எழுதியுள்ளார்கள்.

"ஷாஜஹான் ஆபாத்" ஸ்தலத்திற்கு சமீபமாயுள்ள கியாஸ்பூர் என்ற விடத்தில் அவர்கள் புனித சமாதி நிலை கொண்டிருக்கிறது. அவர்களின் பிறப்பும் இறப்பும் ரபீயுலவ்வல் மாதத்திலேயே நிகழ்ந்துள்ளன.

மஹான் ஷய்க் "சோந்தா ஸாபிரி" அவர்கள் முரீதுகளுள் ஒரு தர்வேஷ் ஆனவர், கஷ்புல் குபூர், ஆலமே அர்வாஹ் (கபுருகளில் நல்லடக்கம் செய்யப் பட்டுள்ள மையத்துகளின் ஆத்மாக்களுடன் பேசும் திறமை) சக்தியை அரும் பெரும் வணக்கப் பிரயாசையைக் கொண்டு அடைந்திருந்தார்.

அன்னார் சம்மந்தமாக அவரது பீர்பாய் (அவருடன் முரீது வாங்கி யிருந்த சகோதரர்) தாம் இயற்றிய கிதாபில் பின் வருமாறு எழுதுகிறார்:—

ஒரு நாள் என் சகோதரர், ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் சமாதிக்குச் சென்று அதன் அருகில் உட்கார்ந்து, முராகிபா (அவதானிக்கை) செய்வதில் ஈடுபட்டார். அவ்வமயம் அவருக்கு ஒளி நிறைந்த ஆற்றுப் பாய்ச்சல் ஒன்று புலனாயிற்று. அதன் எப்புறத்திலிருந்தும் எழும் அலைகள் ஒளி நிறைந்திருந்தன.

இருந்தாற் போலிருந்து அதில் ஒளி நிறைந்த படகொன்றும் வரத் தென்பட்டது. அது சிறந்த நவரத்தினங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டு, தன்னில் ஒரு மஹானை

யும் ஏற்றி வந்தது. அதன் பிரகாசத்தை சூரிய பிரகாசத்திற்கு ஒப்பிடுங்கால், சூரிய பிரகாசம் அதன் ஓர் நுட்பத்திற்கு சமமாக விருந்தது.

தர்வேஷ், நதியிலிறங்கி அம்மஹானை யணுகினர். அவ்வாறு அவர் படகை யணுகினதும் அரியதோர் பரிமளவாசனை அவரையும் கவர்ந்து கொண்டது. அடுத்தாற் போல் அவர் இவ்வளவு செய்நேர்த்தியுடன் படகில் வீற்றிருந்த அம்மஹானை நோக்கி "தாங்கள் யார்?" என்று வினவியபோது அவர்கள் "நான் தான் நிஜாமுத்தீன் பதாயூனி என்பவன் இறைவனது காதலைக் கொண்டவன். அதனாலேயே அவனுடைய ஜோதிகள் என்னை சூழ்ந்து நிற்கின்றன. ஒளலியாக்கள் அதே ஜோதியைப் பெற அரும்பாடு படுகிறார்கள்" என்று விடை பகர்ந்தார்கள்.

அத்தகைய விடை பகர்ந்ததும் ஹஸ்ரத் அவ்லியா அவர்கள் ஓர் தலைப்பாகையை தர்வேஷுக்கு அருள் புரிந்து "இதைக் கொண்டு போங்கள். நான் உங்களுக்கு கயாமத் அதாவது மகிமை வாய்ந்த வலியின் ஸ்தானத்தை அருள் புரிந்தேன்" என்று ஆசிர்வதித்தார்கள்.

'இக்தியாசுல் அன்வார்' என்ற கிதாபில் அதன் ஆசிரியர் ஆனவர், ஹஸ்ரத் ஒளலியா அவர்கள் அந்த தர்வேஷுக்கு தலைப்பாகை அருள் புரிந்ததை யொட்டி "தர்வேஷ், ஜீவித்திருந்த காலம் வரையில் அவருடைய சரீரத்தி லிருந்தும், ஆடைகளி னின்றும் நறுமணம் வீசிக் கொண்டிருந்ததென்றும் அதன் பொருட்டு அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கும் அந்த மணமாகப்பட்டது அவர்களின் உள்ளங்களை குளிரச் செய்து வந்ததென்றும் தர்வேஷ் மவுத்தான பின்னரும் அவரது ஆடைகளி லிருந்து அம்மணம் அகன்று விடவில்லை என்றும்" வரைந்துள்ளார்.

மறுநாள் ஒருவர், ஒரு தடவை பக்தாத் ஷரீபுக்குச் செல்ல தீர்மானித்தார். ஹஸ்ரத் ஸையதினா முஹையத்தீன் ஷய்க் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களின் ரௌலா ஷரீபை தரிசித்து பாத்திஹா கொடுத்து வர வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் சமாதிக்கான புது போர்வையையும் இதர தர்காவுக்கான காணிக்கைப் பொருள்களுடன் யாத்திரைக்குரிய முஸ்தீப்புகளையும் செய்து கொண்டு பிரயாணத்தின் முதல் நாள் கியாஸ்பூரில் தங்கினார். அவர், அவ்வாறு, கியாஸ் பூரில் தங்கின முதல் இரவே, ஓர் சொப்பனங் கண்டார்.

சொப்பனத்தில், ஹஸ்ரத் முஹையத்தீன் (ரலி) அவர்கள் விஜயஞ் செய்து படுத்திருந்தவரின் ஆத்மாவை நோக்கி "ஓ! ஆத்மாவே நீ எங்கே போகிறாய்?" என்று கேட்டதற்கு அது "நான் தங்கள் ரௌலா ஷரீபின் மீது போர்வை யிடப் போகிறேன்" என்று பதிலளித்ததும், ஹஸ்ரத் முஹை யத்தீன் (ரலி) அவர்கள் "நான் இங்கே தானே இருக்கிறேன்" என்று மொழிந்தார்கள்.

ஆத்மா :—"இங்கே என்றால் இது டில்லியைச் சேர்ந்த ஸ்தலம், தாங்கள் இங்கு எந்த விடத்தில் இருக்கிறீர்கள்?" என்று கேட்டது. "நீ, 'நிஜாமுத்தீன்' பெயரைக் கேட்ட தில்லையா? அவர் நான் அல்லவோ? அப்படி யிருக்க நீ எதற்காக அவ்வளவு தூரப் பிரயாணத்தை மேற் கொள்ள வேண்டும்?" என்றார்கள்.

மறு நாள் காலையானதும் சொப்பனங் கண்டவர் தம் கூட இருந்து வந்த உலமாக்களையும் மஷாயக்மார்களையும் ஒன்று கூட்டி தம் சொப்பன பலனைப் பற்றி வினவினர்.

அங்கு, ஒன்று கூடிய அனைவரும் முறையே தாங்களும் அதே மாதிரியான சொப்பனத்தை அன்று இரவு கண்டதாக விவரித்தார்கள்.

இறுதியாக அவர்களின் ஒத்த அபிப்பிராயத்தின் மேல் அவர் கொண்டு வந்திருந்த சகல வஸ்துக்களையும் ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்கள் புனித தர்காவிலேயே காணிக்கையாக சமர்ப்பித்து விட்டார்கள்.

பக்தாத் ஷரீபுக்குப் போய் வர எவ்வளவு பிரயாணச் செலவை அவர்கள் தங்களுடன் கொண்டு வந்திருந்தனரோ, அச்செலவு பணத்தை முழுவதும், தர்காவிலுள்ள கண் காணிப்பு ஆட்களுக்கும் முஜாவிர்களுக்கும் ஏனைய ஊழியர் களுக்கு மிடையே பட்டு வாடா செய்து விட்டார்கள்.

## ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்களின் மரண ஆவல்.

ஸீரத்துஸ்ஸாலிஹீன் என்ற கிதாபின் கீழ்க்கண்ட விஷயம் வரையப்பட்டிருக்கிறது :—

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்களின் மரண தருவாயில் ஷய்க்ருக்னுத்தீன் அபுல் பத்ஹு முல்தானி (ஹஸ்ரத் ஒளலியா அவர்களின் ஆப்த நண்பர்) டில்லிக்கு வந்திருந் தார்கள். அவர்கள் ஹஸ்ரத் அவர்களைப் பார்க்க அவர்கள் இருப்பிடத்திற்குப் போனதும் படுத்திருந்த ஹஸ்ரத் ஒளலியா அவர்கள், ஷய்க்ருக்னுத்தீனை கண்ணெடுத்துப் பார்த்தவுடன் "என்னுடைய கட்டிலின் மேல் உட்காருங்கள்" எனச் சொல்லிய போது "குத்புல் வக்த், மஹ்பூபெ றப்புல் இஸ்ஸத் அவர்களே ! (தற்கால நட்சத்திரம், மாட்சிமை வாய்ந்த அல்லா உடைய அன்பினர்களே !) தங்களின் திரு கட்டிலின் மேல் உட்கார யாருக்கு சக்தி யுண்டு ?" என்று மிக்க தாழ்மை யுடன் பதிலளித்தார்கள்.

அதனால், ஹஸ்ரத் ஔலியா அவர்கள் தம் முரீதுகள் மூலமாய் நாற்காலி யொன்றை தருவித்து அதன் மீது அவர்களை உட்காரச் சொன்னார்கள்.

ஷய்க்ருக்னுத்தீன் நாற்காலியின் மேல் உட்கார்ந்ததும் ஹஸ்ரத் ஔலியா அவர்களின் தேக நிலையைப் பற்றி விசாரித்து விட்டு "சர்வ வல்லமையுள்ள ஆண்டவனுகப் பட்டவன் ஜீவித்தல், மரணித்தல் என்ற விஷயத்தில், நபிமார்களுக்கும் ஔலியாக்களுக்கும் அவர்கள் இஷ்டப்படி சுயேச்சைக்குரிய அதிகாரத்தை தந்தருளியுள்ளான். தாங்கள் அவ்வதிகாரத்தை பிரயோகித்து, உலகின் கண் பொதுமக்களுக்கு ஆதரவளிக்கத் தக்களவில் இன்னமும் சிறிது காலம் ஜீவித்திருக்கக் கூடாதா? அவ்வாறு ஜீவித்திருந்தால் இன்னமும் எத்தனையோ ஜாஹில்கள் (மூடர்கள்) பரிபூரண மனுஷத் தன்மை யடைந்து விடுவரே" என்று முறையிட்ட போது, ஹஸ்ரத் ஔலியா அவர்கள் "என் உண்மை நண்பனின் (ஆண்டவனின்) நட்பாகப் பட்டது எனக்கு அளவுக்கு மேலாகி விட்டது. அந்த நட்பின் உணர்ச்சியானது ஒரு நிமிஷ நேரத்திற்கேனும் என்னை விட்டும் அகன்று போகக் காணோம். அதன் நிமித்தம் என்னுடைய ஒவ்வொரு சுவாசமும் கூட என்னை வற்புறுத்தி அவன் பக்கம் இழுத்த வண்ணமா யிருக்கிறது. மேலும் நான் ரசூலுல்லா (ஸல்) அவர்களையும் இரவுதோறும் கனவில் தரிசிக்கிறேன்; அவர்கள் விஜயமானதும் 'நிஜாமுத்தீனே! உம்மைப் பார்க்க நான் விசேஷ ஆவலுள்ளவனா யிருக்கின்றேன், சீக்கிரம் என் பக்கத்தில் வந்து விடும்' என்று மொழிந்தருளுகிறார்கள்" என்று விவரித்தார்கள்.

ஹஸ்ரத் ஔலியா அவர்கள் வாயலாய் அவ்வரிய மொழிகளைக் கேட்டவுடன் ஷய்க் ருக்னுத்தீன் அவர்களும் அச்சமயம் அங்கு கூடி யிருந்தவர்களும் துக்கம் சகியாது 'ஓகோ'

என்று அழுக ஆரம்பித்தார்கள். பிறகு ஷய்க்ருக்னுத்தீன் அவர்கள் ஹஸ்ரத் அவர்களிடம் "தாங்கள் எங்களுக்கு ஏதேனும் கடைசி உபதேசம் செய்யுங்கள்" எனக் கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் ஒளலியா அவர்கள் "நான் எனக்குத் தெரிந்த ஓர் விஷயத்தை சொல்லுகிறேன். சிஷ்திய வமிசத்தில் உள்ள மஹானொருவர் தாம் இறக்கும் தருணத்தில் 'நான் இறந்த பின்னர், என் மையத்துக் கருகில் 'ஸமா' மஜ்லிஸ் நடத்துங்கள் அதற்குப் பின்னர் என்னை நல்லடக்கம் செய்யுங்கள்' என்று சொல்லி இறந்த பிரகாரமே (மையத்துக் கருகில்) ஸமாவில் ஜனஸா பாடல்கள் பாடப்பட்டன. உடனே இறந்தவர் எழுந்து நின்று படுத்தார். ஏழு நாள் அதேபோல் 'ஸமா' நடந்தேறியது. பிறகு 'ஸமா'வை முற்றிலும் முடித்து விட்டு அவரை நல்லடக்கம் செய்தார்கள். நானும் அம்மஹானின் 'ஸமா' விஷயத்தில் அவரைப் பின்பற்ற விரும்புகிறபடியால் நீங்கள் நான் இறந்ததும் அதே போல் ஸமா நடத்துங்கள்" என்று உபதேசித்தார்கள்.

ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்கள் 'வபாத்' அடைந்த போது ஷய்க் ருக்னுத்தீன் அவர்கள் ஜனஸா தொழுகையில் இமாமத் மேற் கொண்டார்கள். ஜனஸா தொழுகை முடிந்ததும் ஷய்க் ருக்னுத்தீன் அவர்கள் "தம்மை ஹஸ்ரத் ஒளலியா அவர்கள் 4 வருஷங்களாக இமாம் வேலையில் நியமனம் செய்திருந்தானது, அந்தரங்கத்தில், அவர்களின் ஜனஸா தொழுகையில் நான் இமாமாக இருந்து தொழுகை நடத்த வேண்டும் என்பதற்காகத் தான் என்ற இரகசியம் இன்றே எனக்கு வெளியாயிற்று" என்று பெரும் ஆயாசத்துடன் கூறிய பின்னர், அத்தகைய அரிய பாக்கியம் தமக்கு கிடைத்ததற்காக அவர்கள் நாயனை துதித்தார்கள்.

ஜனஸா தொழுகையை முடித்து விட்டு ஷய்க் ருக்னுத்தீன் அவர்கள் 'ஸமா' நடத்துவதற்காக புலவர்களை தருவிக்க எத்தனித்தபோது ஹஸ்ரத் அவர்களுடைய கலீபாக்கள் "ஸமா வேண்டாம், ஏனெனில் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் ஸமா விஷயமாக எந்த மஹானைக் குறித்துச் சொல்லி யிருந்தார்களோ அந்த மஹான் சம்பந்தமான ஸமா 7-நாள் வரையில் நடந்து முடிவுற்றது. ஆனால் எங்கள் ஹஸ்ரத் ஔலியா அவர்களோ 'ஸமா' ஆரம்பித்தால் கியாமத் நாள் பரியந்தம் அதை முடிவுற விடாமல் தயக்கம் செய்வார்கள். அப்பால், உலகில், அது விஷயமாக வீண்புகாரும், கிளர்ச்சிக் குழப்பங் களும் ஏற்பட்டுப்போம்" என்று விவரித்தார்கள்.

கலீபாக்களின் கருத்தை விளங்கிக்கொண்ட ஷய்க் ருக்னுத்தீன் அவர்கள் "அதுவும் சரிதான்" என ஒப்புக்கொண்டு ஜனஸாவை தூக்கிச் செல்வதில் ஈடுபட்டு விட்டார்கள். ஜனஸாவிலிருந்து புனித ஜடலத்தை கபுரில் இறக்கும் சமயத்திலும் ஷய்க்ருக்னுத்தீன் அவர்களே கபுரில் இறங்கினார்கள். கபுரிலிருந்து வெளிவந்த சமயம் அவர்களுக்கு பிரக்ஞையற்றிருந்தது.

கூடியிருந்தவர்கள், காரணத்தை வினவினார்கள். அதற்கு ஷய்க் அவர்கள் (அக்காலத்திய குதுப்மார்களில் ஒருவராக விளங்கப்பட்டு வந்தவர்கள்) பின்வருமாறு பதில் கூறினார்கள்:—

நான் ஹஸ்ரத் ஔலியா அவர்களின் புனித ஜடலத்தை கபுரில் இறக்கியதும், றஸூலுல்லா (ஸல்) அவர்களின் சிறப்புற்ற புனித ஆத்மாவானது கபுரில் விஜயமாகி ஹஸ்ரத் நிஜாமுத்தீனை தன் பக்கத்தில் அமர்த்திக் கொண்டது. நபிநாயகத்தின் ஒளியை கவனிக்கத்தக்களவில் எனக்கு முஷாஹித சக்தி வாயப் பெற்றிருந்தபடியால் நான் அதை சற்று நேரம் வரையில் கவனிக்க முடிந்தது, அதற்கப்புறம் பிரக்ஞையற்றுப் போனேன்"

"மிர்அத்துல் அஸ்ரார்" என்ற கிதாபில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது:—

ஹஸ்ரத் சுல்தானுல் ஔலியா நிஜாமுத்தீன் அவர்கள் "எங்கேனும் ஒரு மூலைமுடக்கில் வீற்றிருந்தபடியே வெளி விஷயங்களையாவும் உள்ளவாறே எடுத்துரைப்பார்கள். அவர்கள் ஜீவித்திருந்த காலத்தில் மக்கள் அவர்களைக்கொண்டு அடைந்து வந்த பலாபலன்களைப் போலொத்த பலாபலன்களையே, இன்னமும் அவர்களைக் கேட்டுக் கொள்பவர்கள் அடைந்து வருகிறார்கள் என்பதற்குத் தடைகிடையாது.

யாத்திரீகரொருவர் விவரிக்கிறார்:—நான் ஹிஜ்ரி 1052-ல் ஹஸ்ரத் அவர்கள் தர்காவுக்குச் சென்றேன். அவர்களின் ஆத்ம சம்பந்தமான அனுக்கிரக பாக்கியங்களை ஏராளமாக அடைந்தேன் சுப்ஹானல்லா! நாளது வரையிலும் ஹஸ்ரத் அவர்களின் சிறப்பும் மகிமையும் நாளடைவில் அதிகரித்துக் கொண்டே போகிறது. கியாமத் நாள் வரையில் அது இதே நிலையில் தான் இருக்குமென்பது திண்ணம்.

டில்லியில் எண்ணிறந்த ஔலியாக்கள் அடக்கமாயிருக்கிறார்கள். ஆயினும் அவர்களுக்கிடை நான்கு விடங்கள் முதன்மைவாய்ந்திருக்கின்றன. (1) ஹஸ்ரத் குத்புல் அக்தாப் காஜா குத்புத்தீன் பக்தியார்காகி (2) ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் (3) ஹஸ்ரத் ஷய்கு நஸீருத்தீன் சிராகே தெஹலவி (4) ஹஸ்ரத் ஷாதுர் கமான் பியாபானி.

## காஜா நிஜாமுத்தீன் ஔலியா ஜீவிய சரித்திரம்
### முற்றுப் பெற்றது.

---

Printed at Shahul Hameedia Press, Madras